Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-06 19-04-2005 செவ்வாய்க்கிழமை ஓசை-60



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

(சி-11481)

# சமாதான சூழலைச் சீர்குலைக்க சிறில.அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விளக்கினோம்

## ஜெனீவாவில் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(ஜெனீவா)

**சமாதான சூழலைச் சீர்குலைக்க சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் பரப்புரைகளுக்குப் பதிலளிக்கும் வகையிலும் சர்வதேச சமூகத்திற்கு எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் வைத்துப் புலிகளின் குரலுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் முக்கியமாக இந்தத்தடவை பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட நாடுகளுக்குச் சென்றுள்ளோம். அங்குள்ள வெளிவிவகார அமைச்சர்களையும் அந்த அமைச்சைச் சார்ந்த அதிகாரிகளையும், அங்குள்ள பொருளாதார அபிவிருத்திக்கான அமைச்சர்கள் அதிகாரிகளையும் சந்தித்துள்ளோம்.அத்துடன் இந்தத் தடவை விசேடமாக நாங்கள் தென்னாபிரிக்காவிற்குச் சென்றிருந்தோம் அங்கு தென்னாபிரிக்க தேசியக் காங்கிரஸின் பிரதிநிதிகளைச்சந்தித்தோம் உப சனாதிபதியையும் முக்கியமாக தேசியக் காங்கிரஸின் தலைவர்களையும் மற்றும் அங்குள்ள தமிழ்மக்களையும் சந்தித்தோம்.

இந்தப் பயணத்தின்போது கூடுதலாக நாங்கள் இரண்டு விடயங்களை முக்கியமாக எடுத்திருந்தோம். ஒன்று தற்பொழுது இந்தச் சமாதானச் சூழ்நிலை ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளமை, சமாதானச் சூழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க இராஜாங்கச்செயலர் இன்று இலங்கை வருகின்றார்

(கொழும்பு)



அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான பிரதி இராஜாங்க செயலர் கிறிஸ்டினா ரொக்கா இன்று அதிகாலை இலங்கைக்கு வருகிறார்.

இரவு 12.00 மணிக்கு புதுடில்லியில் இருந்து வரும் யு எல் 192 என்ற வானூர்தியில் கிறிஸ்டினா ரொக்கா கட்டுநாயக்கவை வந்தடைவார்.

மூன்று நாட்கள் இங்கு தங்கியிருக்கும் அவர், மட்டக்களப்பு மாவட்டம் உட்பட ஆழிப பேரலை யின் காரணமாகப் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவுள்ளார்.

.இதன் பின்னர் அவர் கொழும்பில் சனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஆழிப்பேரலை தொடர்பான விஜயம் எனக் கூறப்பட்டாலும் கிறிஸ்டினா ரொக்கா இலங்கையில் எதிர்வுகூறப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்புக் குறித்த முன்னெடுப்புகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

## தமிழ்ச்செல்வன்-எரிக்சூல்ஹெய்ம் சந்திப்பு நாளை நடைபெறும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்மிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை நாளை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்புக் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பெற்றபின் இடம்பெறும் பேச்சுவார்த்தை கிளிநொச்சியில் சமாதான செயலகத்தில் இடம்பெறுமா? அல்லது கட்டுநாயக்காவின் விசேட விடுதி ஒன்றில் இடம்பெறுமா? என்பது குறித்த உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. ஐரோப்பியப் பயணத்தை முடித்துக் கொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் விடுதலைப் புலிகளின் காவலரண் மீது தாக்குதல் நடத்திவிட்டுஇராணுவம் தப்பியோட்டம்

(திருமாலை)

திருகோணமலை மூதூரில் கிழாத்தி மலைப் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.10 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மூதூர் கிழக்கு பச்சனூர்ப் பகுதியில் கிழாத்திமலையில் உள்ள ஆறு ஒன்றின் கிழக்காக விடுதலைப் புலிகளின் அரணும், மேற்காக சிறிலங்கா இராணுவத்தினரின் அரணும் உள்ளன.

இம் முகாம் மீது சுமார் 15 முதல் 20 இராணுவத்தினர் சீருடையில் வந்து திடீரெனத் தாக்குதல் மேற்கொண்டு விட்டு சிறிது நேரத்தின் பின்னர் தப்பிச் சென்று விட்டனர். இத்தாக்குதலில விடுதலைப்புலிகளுக்கு எதுவித

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை அரசு நிராகரிப்பது யுத்தத்திற்கு வழிவகுக்கும்

### -சர்வதேச செய்தி ஊடகங்கள் கவலை

(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை சிறிலங்கா அரசு நிராகரித்து வரும் நிலையில் யுத்தம் தொடர்பான அச்சம் அதிகரித்து வருவதாக சர்வதேச செய்தி ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் ஐரோப்பிய, ஆபிரிக்கப் பயணங்கள் தொடர்பாக செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ள ரொய்ட்டர் செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.தமிழீழத் தேசத்துரோகிகளை ஊக்குவித்து விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வரும் சிறிலங்கா அரசின் நடவடிக்கை தொடர்ந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துவிடும் என்று நோர்வே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் நெருக்கடிகள் நீடிப்பு!

### விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர்

(ஜெனீவா)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் முட்டுக்கட்டை நீடிப்பதாக தமிழீழ அரசியல் விவகாரக் குழுவில் இடம்பெற்றுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார். ஐரோப்பா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்த தமிழீழ அரசியல் விவகாரக்குழுவினர் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதன் அவசியத்தையும் போரினால் சிதைவடைந்த தமிழர்தாயகத்தை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாகவும் பல்வேறு நாடுகளின் அமைச்சர்களுடனும் அரசுப் பிரதிநிதிகளிடனும் விவாதித்தனர். தங்களது

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அன்னை பூபதி நினைவு நிகழ்வும் நாட்டுப்பற்றாளர் தினமும் இன்று தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவும் நிகழ்வு தமிழீழ நாட்டுப்பற்றாளர் தினமும் இன்று தமிழீழமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இறுதி நாள் நினைவுதினத்தினை முன்னிட்டு பிரதேச ரீதியாக வீதிகளின் இருமருங்கும் வாழைகள் நடப்பட்டு, தோரணங்கள், சிவப்பு மஞ்சல் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் வர்த்தக நிலையங்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பாக அலங்கரிக்கப்பட்டு காட்சியளிப்பதுடன் உண்ணாவிரத நிகழ்வு இடம்பெறும் இடங்களில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பணிமனைகள், பாசறைகள் என்பவற்றிலும் மஞ்சல், சிவப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதுடன், ஒலி பெருக்கிகள் மூலம் தாயகப் பாடல்கள் ஒலித்தவண்ணம் உள்ளன.

இன்று காலை 9.00மணிக்கு பொதுச் சுடரேற்றல் தமிழீழத்தேசியக் கொடியேற்றல், திருவுருவப்படத்திற்கான மலர்தூவி மலரஞ்சலி செலுத்துதல், ஈகச்சுடரேற்றல் மலர்மாலை அணி வித்தலுடன் உண்ணாநோன்பு நிகழ்வு ஆரம்ப மாகும். உண்ணாவிரத நிறைவினைத் தொடர்ந்து மாலை நினைவுரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு இறுதிநாள் நிகழ்வுகள் இன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திலும், மல்லாவி மாவீரர் மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

யாழ்குடாநாட்டில் இன்று அன்னை பூபதியின நினைவு நாளையொட்டிப் பிரதேச ரீதியாக உண்ணாவிரதங்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

*கருணாநிலையத்தில் இயங்கி வரும் மியூரியல் முன்பள்ளிக்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் தேவை. தகுதியுடையவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் மேற் குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.*

நிர்வாகி,
கருணாநிலையம்,
கிளிநொச்சி.
(6053)


## வரிவிளம்பரம்


### சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு

எம்மிடம்தரமானசீமெந்து, மணல் கலவையில்தரமான முறையில் அறுக்கப்பட்ட சீமெந்து கல் விற்பனைக்குஉண்டு.அளவு-4"x6"x12." தொடர்புகளுக்கு:- தமிழ்கடல்,கட்டடப் பொருள் வாணிபம்,155 யாழ் சாலை, கிளிநொச்சி. (5912)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேப்பிறிச் கல்லூரி டிப்போ றோட்,உதயநகர்,கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### தவறிவிட்டது

நாகேந்திரம் அற்புதசோதி ஆலங்கேணி பூநகரி, என்பவருடைய தற்காலிக அடையாள அட்டையும், நிரந்தரப் பயணஅனுமதி அட்டையும் 16.04.2005 திகதி முகமாலைக்கும், கிளிநொச்சிக்குமிடையில் பயணிகள் பேருந்தில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும் தகவல்:- நாகேந்திரம். (6057)

### முட்டைக்கோழி விற்பனைக்கு உண்டு

எம்மிடம் பிறிமா இன முட்டைக் கோழி (சிவப்பு) மூன்று மாதம் நிரம்பியநிலையில் உள்ளது. விலைநேரில்பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:-சுடர், கோழி வளர்ப்பகம்,155 விவேகானந்த நகர்,கிளிநொச்சி. (5913)


## 35 அகதிகள் வந்தனர்

இந்தியாவிலிருந்து35அகதிகள நேற்றுக்கட்டுநாயக்கவை வந்தடைந்தனர். சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான அமைப்பு இவர்களை இவர்களின் சொந்த இடங்களான வவுனியா மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது

# கல்விமாணி கற்கைநெறி

(அலுவலக செய்தியாளர்)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும்கல்விமாணிக் கற்கை நெறியில் கிளிநொச்சி பிராந்திய நிலையத்தினூடாகக்கற்கும் முதலாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் நாளை தொடக்கம் கிளிநொச்சி மத்தியகல்லூரியில் காலை 9.00மணி தொடக்கம் மாலை.400மணிவரை நடைபெறும்.முதலாம் வருடஆசிரிய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவகி புவனேஸ்வரன் கேட்டுள்ளார். (சோ)


## DPDHS OFFICE, KILINOCHCHI
## CALLING TENDER FOR THE PURCHSE OF EQUIPMENTS &FURNITURE

The chairman, Tender Board, DPDHS Office, Kilinochchi will receive tenders for the following items needed forDPDHS Office, Kilinochchi on or before 10.05.2005 at 10am. Separate sealed tenders in duplicate with the project title written on the top of the left hand corner of the envelope should eit'her be deposited in the Tender Box, DPDHS Office, Kilinochchi or sent by registered post addressed to The Chairman, Tenserboard,DPDHS Office, Kilinochchi .

### EQUIPMENTS

| | |
|---|---|
| Photocopy Machine | - (Toshiba) |
| Ronio Machine | - |
| Multimedia Projector | - (Sony Latest model) |
| Flash memory | - (1 GB Mercury) |
| Scanner | - (Cannon Latest model) |
| Color Printer | - ((Epson Stylus 42C) |
| Rewriteable-CD | - (TDK) |
| TV&VCD Player | - (TV sony-21 Inch) VCD Player DVD&VCD&MP3) |
| Water Pump | - (Robin15) |
| Stabilizer | - (5 KV Nippon) |
| Computer set | - (CPU.Intel 3.0 GHZ,RAM 512 MB,HDD-120GB, VGA 64MB) |

### FURNITURE

| | |
|---|---|
| Cabinet | - (4'x3' one side glass) |
| Office table | - (6'x4' steel) |
| Arm chair | - (Steel With cushion) |
| Medicine cupboard | - (6'x4' four side glass) |
| Bed side cupboard | - (3'x1 1/2 Wooden) |

DPDHS,
DPDHS OFFICE,
KILINOCHCHI.

(சி.11648)


## வவு.பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு பா.உறுப்பினர் ஒலிபெருக்கி அன்பளிப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் அவர்கள் வவுனியாஅண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கித் தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்



பாராளுமன்ற உறுப்பினரின் பாதீட்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ்கொள்வனவு செய்யப்பட்ட இவ் ஒலிபெருக்கித் தொகுதியை சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஒலிபெருக்கித தொகுதியை அதிபர் திருமதி நடேசமூர்த்தி அவர்களிடம் கையளித்தார். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர்.செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)


## சிங்கள மொழி வகுப்புக்கள் புதியபிரிவுகள்ஆரம்பம்

**பிரிவு I-சனி,ஞாயிறு (மாலை),**
**பிரிவு II-செவ்வாய், வியாழன் (மாலை)**
ஒவ்வொருபிரிவும் 15 பேரை மட்டுமே கொண்டதாகும்.

குறிப்பு: நேரம், கட்டணம், ஆரம்ப திகதி, பதிவு மற்றும் சகல விபரங்களுக்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(6059) நிலவு கணினித் தொழில்நுட்பம், கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1979 - 02 - 20 | 2000 - 04 - 19 |

**லெப்.வெற்றியரச்**
**செல்வராசா சந்திரகலா (விஜி)**

தாயகத்தை மீட்டிடத்தான்
தாயென்னை மறந்தாயோ
அக்கா இங்கு அழுது வாட
அண்ணன் படையில் சேர்ந்தாயோ
தங்கை இங்கு தவித்துவாட
தந்தையிடம் சென்றாயோ
ஐந்தாண்டு சென்றதம்மா
ஆவி துடிக்குதம்மா
அருகில் நீ வேண்டுமென்று
ஆண்டவனை வேண்டி நிற்கறோம்

தாய்,சகோதரிகள்,
உற்றார்,உறவினர்கள்.



## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1952 - 07 - 31 | 1980 - 05 - 28 |

**அமரர்**
**சபாரட்ணம் செல்வராசா**

மனைவி இங்கு வாடி நிற்க
மக்கள் இங்கு ஏங்கி நிற்க
மண்ணுலகை விட்டு நீங்கள்
மறைந்து ஆண்டு பல சென்றாலும்
எம் இல்லங்களிலும் உள்ளங்களிலும்
என்றும் வாழ்கிறீர்கள்

(6058) மனைவி, மக்கள்,
உற்றார் உறவினர்.



## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை** :- தாதியர் பயிலுனர்

**தகைமை** :-I. கா.பொ.த.சாதாரணதரத்தில் விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

II. மருத்துவ,சுகாதார அனுபவங்களுடன் ஆங்கில அறிவும்விசேட தகைமையாகக் கொள்ளப்படும்

**மேற்படி தகைமையுடையவர்கள் 30.04.2005 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு**

01. **தங்கள் கைப்பட பூர்த்தி செய்த சுயவிபரக் கோவை**
02. **கல்விச் சான்றிதழ்**
03. **பிறப்புச் சான்றிதழ்**
04. **ஏனைய நற்சான்றிதழ்களுடன் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,கிளிநொச்சிக்கு நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.**

*குறிப்பு:-*
*முன்னர் விண்ணப்பம் அனுப்பியவர்களும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கலாம்.*

பணிப்பாளர்,
சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம்,
ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி.

(6061)



ஈரானியப் புரட்சித்தலைவர் அயதுல்லா கொமெய்னியின் நினைவு நாளான நேற்று தெஹ்ரானில் நடைபெற்ற அணிவகுப்பில் ஈடுபடும் ஈரானிய இராணுவம்

# கொலை, கொள்ளையில் ஈடுபட்டோர் சவுதி அரேபியரின் தலை துண்டிப்பு

(ரியாத்)

இந்தியர் இருவர் மற்றும் பாகிஸ்தானியர் ஒருவரைப் படுகொலை செய்த சவுதிஅரேபியரின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சவுதி உள்துறை அமைச்சகம் நேற்றுத் தெரிவித்தாவது:-

அப்துல் ரகுமான் இந்தியர்கள் இருவரைக் கொலை செய்தார். சீனியர் மயோ மற்றும் டிடோ ஷங்கர் இருவரும் இந்தியர்கள். அவர்களிடம் வழிப்பறி செய்த அப்துல்ரகுமான் பின்னர் இருவரையும் கொன்றுவிட்டார்.

அதேபோல் பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது எர்ஷாத் என்பவரிடமும் பணத்தைக் கொள்ளை அடித்து அவரையும் கொன்றுவிட்டார். இது குறித்துக் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அப்துல்ரகுமானின் தலையைத் துண்டித்து மரணதண்டனை வழங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி அப்துல்ரகுமானின் தலை துண்டிக்கப்பட்டது. எனத் தெரிவித்துள்ளது. இந்தாண்டு மட்டும் பல்வேறு குற்றங்களுக்காக இதுவரை 38 பேரின் தலை சவுதியில் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




ஜப்பானுக்கு எதிராக சீனாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்.

# சீனாவில் தொடரும் எதிர்ப்புப் போராட்டம்

# சீனாவுக்கு எதிராக ஜப்பானிலும் வன்முறை

(பீஜிங்)

**சீனா- ஜப்பான் இடையேயான மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஷாங்காய் நகரில் ஜப்பானியர்களை சீனக் கும்பல் ஒன்று தாக்கியதில் இரண்டு பேர் கரயம் அடைந்துள்ளனர் இதேவேளை சீனாவில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஜப்பானிலும் போராட்டம் நடந்துவருகிறது.**

ஜப்பான் இராணுவம் 1935 ஆம் ஆண்டில் சீனாவை ஆக்கிரமித்து அட்டூழியங்கள் செய்தது. இந்தச் சம்பவம் சீனர்கள் மனதில் ஆறாத ரணமாக இருந்து வருகிறது. காலம் மாறிவிட்ட நிலையில் சமீப காலத்தில் இந்த சம்பவத்திற்கு ஜப்பான் வருத்தம் தெரிவித்தது. இந்த நிலையில் ஜப்பானில் சமீபத்தில் வெளிவந்த வரலாற்றுப் புத்தகத்தில் இந்த அட்டூழியங்கள் பூசி மறைக்கப்பட்டன. இது சீனாவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது அத்தோடு ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தி வருவதும் சீனர்களிடம் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சீனாவில் ஜப்பானுக்கு எதிராகப் போராட்டங்கள் கடந்த இரு வாரங்களாக நடந்து வருகின்றன.

ஷாங்காய் நகரில் ஜப்பான் எதிர்ப்புப் போராட்டம் நடந்தது அங்கு ஜப்பான் தூதரகத்துக்கு சீனர்கள் ஊர்வலமாகச் சென்று தூதரகம் மீது தாக்குதல் நடத்தினர் இதனால் தூதரகம் பலத்த சேதமடைந்தது. வழியில் கண்ட ஜப்பானியர்களை ஒரு கும்பல் தாக்கியதில் இரண்டு பேர் காயம் மடைந்தனர் ஜப்பான் ஆக்கிரமிப்பில் ஒரு காலத்தில் இருந்த மஞ்சூரியா தலைநகரான ஷென்யாங் நகரிலும் நேற்று முன்தினம் ஜப்பானின் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. பீஜிங்கில் ஜப்பான் தூதர் வீட்டுக்குப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது



பாக்தாத்தில் சியா முஸ்லிம்களைக் கொல்ல சுனி ஆயுததாரிகள் நுழைந்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பொதுமகன் ஒருவரைச் சோதனையிடும் ஈராக்கியப் படையினர்.

# மசகு எண்ணெய் விலை உயர்வைத் தடுங்கள் ஐ.எம்.எப். உறுப்பு நாடுகள் கோரிக்கை

(வோஷிங்டன்)

மசகு எண்ணெய் விலை உயர்வால் பொருளாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நிதியத்தின் உறுப்பு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மசகு எண்ணெய் விலை உயர்வு உலகப் பொருளாதாரத்தை அச்சுறுத்தும் சக்தியாக மாறி வருகிறது. வளரும் நாடுகளுக்கு பெரும் தடைக்கல்லாகத் திகழும் விலை உயர்வைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'உலகப் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு நிலை விரிவடைந்து கொண்டே போகிறது. பொருளாதார வளர்ச்சிக்கும், சேமிப்புக்கும் உள்ள இடைவெளி கவலை அளிப்பதாக உள்ளது. இது சீரமைக்கப்பட வேண்டும்' என சர்வதேச நிதியத்தின் மேலாண்மை இயக்குனர் ரோட்ரிகோ ரேடோ கவலை தெரிவித்தார்

# எல்லைகளை மாற்றியமைக்க முடியாது தற்போதைய எல்லைக்கோடு நிரந்தரமல்ல

## ——இந்தியா, பாக்.முரண்பட்ட கருத்து




(புதுடில்லி)

இந்தியா- பாகிஸ்தான் இடையே எல்லைகளை மாற்றி அமைக்க முடியாது என்று இந்தியா கூறியிருப்பதை ஏற்க முடியாது. அதேபோல் இப்போது உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு நிரந்தரமானதும் இறுதியானதும் அல்ல எனவும் பாகிஸ்தான் பிரதமர் முஷாரப் தெரிவித்துள்ளா.

காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும். இப்போது மன்மோகன்சிங்குடன் சுமுகமான உறவு இருக்கிறது. ஆனால் உலகில் யாருமே நிரந்தரமாக இருக்க முடியாது. காஷ்மீர் பிரச்சினைக்கு இப்போது தீர்வு காணாவிட்டால் பிற்காலத்தில் மாறுபட்ட சூழ்நிலையில் காஷ்மீர் பிரச்சினை பூதாகரமாகக் கிளம்பிவிடும். எனவே இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும், காஷ்மீர் மக்களுக்கும் ஏற்புடைய தீர்வு ஒன்றை எட்ட வேண்டும. ஸ்ரீநகர்- முசாபராபாத் இடையே பேருந்து போக்குவரத்தை சீர் குலைக்கத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் கண்டிக்கத்தக்கது அமைதி முயற்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

எந்தப் பிரச்சினைகளையும் மூடிமறைத்துவிடமுடியாது. தீவிரவாதத்தை எந்த ரூபத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. காஷ்மீரில் கொலைகளுக்கு யார் காரணமாக இருந்தாலும் சரி உடனடியாக அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் அணு ஆயுத ஏவுகணைச் சோதனைக்கும், போர் விமானங்கள் வாங்கவும் ஏன் பெரும் பணத்தைச் செலவிட வேண்டும். என்று என்னிடம் கேட்கிறார்கள். என்னிடம் இந்த கேள்வியை கேட்பது ஆச்சரியமாகவும்க அதிர்ச்சியாகவும் இருக்கிறது உங்கள் அரசிடமே (இந்திய அரசு) இந்த கேள்வியைக் கேளுங்கள். இந்தியா ஏவுகணைச் சோதனைகளையும் போர் விமானங்கள் வாங்கி குவிப்பதையும் நிறுத்திக் கொண்டால் பாகிஸ்தான் அணு ஆயுத ஏவுகணைச் சோதனை களை நிறுத்திக் கொள்ளத் தயார் போர் விமானங்கள் வாங்குவதையும் நிறுத்திக் கொள்ளும்.

ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு குழாய் வழியாக எண்ணெய் கொண்டு வரும் 400 கோடிடொலர் திட்டத்தை பாகிஸ்தான் ஆதரிக்கிறது. இதனால் இந்தியா- பாகிஸ்தான் இரு நாடுகளுக்குமே நன்மைதான் என்றார் முஷாரப்

# நியாஸ் தீவில் தொடரும் பூகம்பம் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர்!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா, நியாஸ் தீவில் கடந்த சனியன்று ஏற்பட்ட பூகம்பத்தால் மக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியேறி தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியா, சுமாத்திராத் தீவில் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி பயங்கர பூகம்பம் தாக்கியது. இதைத் தொடர்ந்து சுனாமி அலைகள் ஏற்பட்டு, பல நாடுகளில் இலட்சக்கணக்கான மனித உயிர்களைப் பலி வாங்கியது. இந்தப் பூகம்பத்துக்குப் பின், சுமாத்திராத் தீவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ந்தும் பூகம்பம் தாக்கி வருகிறது.

நியாஸ்தீவில் கடந்த மாதம் 8.7 ரிச்டர் அளவில் பூகம்பம் தாக்கியது.இது இரண்டாயிரம் பேரைப் பலி வாங்கியது. கடந்த சனியன்று இரவு இத்தீவில் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. 6.1 ரிச்டர் அளவில் இருந்த இந்தப் பூகம்பம் 107 கிலோ மீற்றர் தொலைவில், கடலில் 20 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

# நிலவில் சூரிய ஒளிபடும் இடத்தில் ஆராய்ச்சி அமெரிக்க விஞ்ஞானிகள் முடிவு

(வோஷிங்டன்)

நிலவில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழலை உண்டாக்க அமெரிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 1969 ஆம் ஆண்டு அப்பல்லோ விண்கலத்தின் மூலம் அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் கால் பதித்தார். புவி ஈர்ப்பு விசை இல்லாத நிலவில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லை என இவர் தெரிவித்திருந்தார்.

நிலவில் எப்போதும் சூரிய ஒளி விழக்கூடிய பகுதியில் தரையிறங்கி அங்கு ஆராய்ச்சி மேற்கொள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். சந்திரனின் வட துருவத்தில் சூரிய ஒளி எப்போதும் காணப்படுகிறது. எனவே, இங்கு தரையிறங்குவதற்குரிய நடவடிக்கைகளை நாசா விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். இதற்குரிய வரைபடங்களைப் பொறியியலாளர்கள் இரவு பகலாகத் தயார்செய்து வருகின்றனர்.நிலவின் வடக்குப் பகுதியில் மூன்று எரிமலைகள் உள்ளன. இந்த எரிமலைகள் மீது தொடர்ந்து சூரிய ஒளி விழுகிறது. எரிமலையின் மற்றொரு பகுதியில் நிரந்தர இருள் காணப்படுகிறது. இந்த எரிமலை சூழ்ந்துள்ள பகுதிகளில் கனிய வளமும தண்ணீர் வளமும் இருக்கக் கூடும், என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.சந்திரனின் ஒரு பகுதியில் 100 டிகிரி செல்சியஸ் வெப்பமும், மற்றொரு பகுதியில் மைனஸ் 180 டிகிரி அளவுக்குக் குளிரும் நிலவுகிறது. இந்த வேறுபட்ட சீதோஷ்ன நிலையைச் சமாளிப்பது கடினம் என்பதால், முதலில் ரோபோ மூலம் விண்கலத்தை அனுப்பி அங்குள்ள சூழலை ஆராய நாசா விஞ்ஞானிகள திட்டமிட்டுள்ளனர்.

# வெருகல் பிரதேசத்திற்கு மின்சார இணைப்பு வழங்க

# ஈச்சிலம்பற்று, விநாயகபுரம், விருட்சம் மக்கள் கோரிக்கை

(திருமலை)

**வெருகல் பிரதேசத்திற்கு விரைவில் மின்சாரம் கிடைக்க உதவும் படியும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நீண்ட கால நிலையான அபிவிருத்திக்கு உதவுமாறும் ஈச்சிலம்பற்று; விநாயகபுரம் விருட்சம் மக்கள் அபிவிருத்தி நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. இன்ரர் எஸ்.ஓ.எஸ் பொறுப்பதிகாரிக்கு அனுப்பிய மகஜரில் விருட்சம் மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர் ச.ஜெயகாந்தராசா இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.**

"திருகோணமலை மாவட்டத்தில் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கேனும் மின்சாரம் வழங்கப்படாத பிரதேச செயலர் பிரிவு ஒன்று இருக்கின்றது என்றால் அது வெருகல் பிரதேச செய லர் பிரிவு என்பது வேதனையான உண்மை" என்றும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வெருகல் பிரதேச மக்கள் கடல் கோளினாலும் பாதிக்கப்பட்டனர். தமது கடின உழைப்பால் சேர்த்து வைத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் கடல் கோளினால் இழந்துவிட்டார்கள். இந்த நிலையில் துரித அபிவிருத்தியை சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியுடன் திட்டமிட்டு வருகின்றோம். உட்கட்டுமான அபிவிருத்தி அமையுமானால் மக்களின் அபிவிருத்தி வேகமாக இருக்கும். இதற்கு தேவையானது மின்சாரம். இன்றியமையாத இத் தேவையை வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் வெருகல் ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர், விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (25)

# அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம்

தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வை முன்னிட்டு பரந்தனில் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கோரக்கன் கட்டு மாளிகா குடியிருப்பு முன்பள்ளி மண்டபத்தில் பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நாகேந்திரம் தலைமையில் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது

தேசியக் கொடியை கண்டாவளை கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலினி ஏற்றி வைத்தார். பொதுச் சுடரினை கோரக்கன் கட்டு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் செல்வராசாவும், ஈகச்சுடரினை மாவீரர்களின் தந்தையர்களான கணேசன் மற்றும் பழனியாண்டி ஆகியோரும் ஏற்றி வைக்க, தொடர்ந்து மலர் மாலையினை மாவீரரின் தாய் மீனம்மா அணிவித்தார். மலர் வணக்கம் செலுத்தி நிகழ்வை ம. நாகேஸ்வரி தொடக்கி வைத்தார். இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இதே வேளை அன்னை பூபதியின் நினைவு நாளை முன்னிட்டு துணுக்காய் பிரதேசத்தில் மல்லாவி தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தினரால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஒன்பதாம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் சிறிதரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது மல்லாவி மாவட்ட நீதிமன்ற வளாகம் பிரதான வீதிகளின் இருமருங்கிலும் துப்புரவு செய்யப்பட்டது. மேலும் தியாகதீபம் அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு தினத்தை முன்னிட்டு தாரணி குடியிருப்பு முன்பள்ளியில் தாரணி குடியிருப்பு மக்களால் கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பெருமளவிற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இச் சிரமதானப் பணி கிளிநொச்சி பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழில்மதி தலைமையில் இடம்பெற்றது. இச் சிரமதானப் பணியில் முன்பள்ளி ஆசிரியர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், அகதிகள் புனர்வாழ்வுப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கண்டாவளை மகாவித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா திறப்பு விழா

(விசுவமடு)

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலயத்தில் "சிறுவர் பூங்கா" திறப்பு விழா நிகழ்வு கண்டாவளை மகாவித்தியாலய முதல்வர் சி.சிறிதரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் மங்கல விளக்கினை கண்டாவளை கிராம உத்தியோகத்தர் இ.சண்முகநாதன், கண்டாவளை மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மா.சிறிகணநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஏற்றி வைக்க, பாடசாலைக் கொடியை பாடசாலை உப அதிபர் திருமதி.பாலேந்திரா ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து பூங்காவிற்கான பெயர் பலகையை கிளிநொச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பூங்காவிற்கான அரங்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமானது. அரங்க நிகழ்வில் முதலில் வரவேற்பு நடனம் பாடசாலை மாணவர்களால் வழங்கப்பட்டது.

நிகழ்வின் தலைவர் சி.சிறிதரன் தலைமை உரையினை வழங்கினார். ஆசியுரையினை புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதம குருவான சிவசிறி சிவலோக நாதக் குருக்கள் வழங்கினார். கருத்துரையினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், கண்டாவளைக் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் சி.பரமதாஸ், செயலாளர் காசிமணியம் ஆகியோர் வழங்கினார்.

சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் வழங்கினார்.

# முன்பள்ளி கல்வி மேம்பாட்டிற்கான வலயக் கட்டமைப்பு தெரிவு

மன்னார் மாவட்டத்தில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வலயக் கட்டமைப்புத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட த.பு.கழக மாவட்டச் செயலகத்தில் மன்னார் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எல்.ஆர்.குரூஸ் தலைமையில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட த.பு கழகத்தின் அனுசரணையுடன் செயற்பட்டு வரும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் மன்னார் வலயத்திற்கென 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தலைவராக எல்.ஆர்.மேவின் குரூஸ், செயலாளராக செல்வி சோ.கௌரீஸ்வரி, பொருளாளராக மகருன் நிசா மற்றும் எட்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் நோக்குடன் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கெடுக்கும் நோக்குடனும் இவ்வாறான தெரிவு இடம் பெற்றுள்ளது. இதில் த.பு.கழக மாவட்டப்பணிப்பாளர், மன்னார் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மாவட்ட இணைப்பாளர் மற்றும் நானாட்டான், முருங்கன் பேசாலை மன்னார் பிரதேசக்கட்டமைப்பு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மழையால் சிறுபோக நெல் விதைப்பு தாமதம்; நெல்லை சந்தைப்படுத்துவதிலும் நெருக்கடி

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக 2005 சிறு போக நெல் விதைப்பு தாமத மடைந்துள்ளது. வழமைக்கு மாறாக இந்த வருடம் பங்குனி மாதத்தில் 2005 சிறுபோக உற்பத்தி மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போது பங்குனி மாத இறுதிப் பகுதியில் பெய்த மழை காரணமாக விவசாயிகள் நெல் விதைப்பிற்கு நிலம் பண்படுத்த முடியாது பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றார்கள்.

கடந்த பெரும்போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை உடன் சந்தைப்படுத்த முடியாத நிலைமையையும் தற்போது விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (46)

# "கடல் வரைந்த ஓவியங்கள்" வவுனியாவில் கண்காட்சி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "கடல் வரைந்த ஓவியங்கள்" என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி ஒன்று எதிர் வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆழிப் பேரலை அனர்த்தத்தை சித்தரிக்கும் வகையிலான இவ் ஓவியக் கண்காட்சி வைரவபுளியங்குளம் பிரதேச திருமறைக் கலாமன்றப் பணிமனையில் நடைபெறவுள்ளது. திருமறைக் கலாமன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள இக் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் நாடாவை வெட்டித் திறந்து வைப்பார். (10)

# கல்வி மேம்பாட்டுப் பேரவை பொதுக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இதனை முல்லை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றி வைத்தார் தொடர்ந்து ஈகச்சுடரினை துணுக்காய் வ்லயக் கல்விப் பணிப்பாளர் குரூஸ் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருள்மாஸ்ரர், முல்லை மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், துணுக்காய் வயலக்கல்விப் பணிப்பாளர் குரூஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து இடம் பெற்ற நிர்வாகத் தெரிவில் தலைவராக அதிபர் அல்பிரட்டும், செயலாளராக அதிபர் பாஸ்கரனும், பொருளாளராக அதிபர் சுப்பிரமணியேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். (08)

# மன்னார் கறுக்காய்க் குளத்தில் விசேட மருத்துவ முகாம்

மன்னார் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் கறுக்காய் குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் அண்மையில் விசேட மருத்துவ முகாம் இடம் பெற்றது.

காது, மூக்கு தொண்டை சிகிச்சை நிபுணர், கண் சிகிச்சை நிபுணர், தோல் சிகிச்சை நிபுணர் ஆகியோருடன் திலீபன் மருத்துவ சேவை மருத்துவரும் இணைந்து இச்சேவையினை வழங்கியிருந்தனர்.

இதில் உடன் 97 பேருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டன. மொத்தமாக 398 நோயாளர் பயன் பெற்றனர். மேலும் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியோரின் விபரமும் திரட்டப்பட்டு அதற்கான ஒழுங்குகளும் செய்யப்படுகின்றது.

இவ் விசேட முகாம் பிரத்தியேகமாக இந்தியாவிலிருந்து மீளத் தாயகம் திரும்பியோருக்காக நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்திக் குழு அமைப்பு

குமுழமுனையில் அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான இளையோர் அமைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக் குழு அண்மையில் தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக ச.உதயநாதன், செயலாளராக சி.சிதம்பரநாதன், பொருளாளராக பா.கமல் ஆகியோருடன் மேலும் எட்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

# கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா

தேசியக் கல்வியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்று 2000-2002 கல்வி யாண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா மே மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.


கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய கல்வியற்கல்லூரிகளின் ஆணையாளர் திருமதி எஸ். தர்மலதா தலைமையில் நடைபெறவுள்ளது

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இப் பட்டமளிப்பு விழாவில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்ற 200 தமிழ், சிங்கள ஆசிரியர் பயிலுனர்களும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்ற 150 தமிழ் ஆசிரியர் பயிலுனர்களும் பட்டம் பெறவுள்ளனர்.

# அனைத்து தொழிற் சங்கங்களின் நிர்வாக சபைத் தெரிவுக்கு அழைப்பு

துணுக்காய்ப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து தொழிற் சங்கங்களின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் எதிர் வரும் 20.04.2005 அன்று காலை 10.00 மணிக்கு துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் மின் ஒட்டு வேலை செய்வோர்கள், கடைச்சல் வேலை செய்வோர்கள், ஆடை தைப்பவர்கள், சிறுகைத் தொழில் நிறுவனங்கள், குளிர்களி உற்பத்திசாலைகள், மட்பாண்ட உற்பத்தியாளர்கள், அரைக்கும் ஆலைகள் போன்றவற்றின் உரிமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (24)

# தேசப்பற்றின் சின்னம் - அன்னைபூபதி



தமிழ்த்தேசியம் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பேணி வருவதற்கு தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னாலியன்றதைச் செய்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறான். நிலம், தமிழ்மொழி, தமிழருக்கேயுரிய பண்பாடு என்பன எந்த அளவிலே பாதுகாக்கப் பட்டிருக்கின்றதோ அல்லது அது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதோ அந்த அளவிலேயே தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரின் பெருமையும், சிறப்பும் தங்கியிருக்கிறது என்று கூறலாம். தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு வரும் தனது நாடு, சமூகம், தேசம் என்பவற்றுக்குத் தன்னாலான பணியைச் செய்யக்கடமைப்பட்டுள்ளனர். இதனைப் பலர் அர்ப்பணிப்புடன் செய்தும் வருகின்றனர்.

இவ்வாறான அர்ப்பணிப்புள்ள சேவையாளர்கள் அல்லது தமிழ்ப் பற்றாளர்களின் ஈகையினாலேயே தமிழினம் இன்னும் தனக்கேயுரிய பெருமையை வைத்துக்கொண்டிருக்கிறது. இன்று எம்மத்தியிலேயிருந்து பல விதமான ஈகங்களைச் செய்து மாவீரர்களாக, நாட்டுப்பற்றாளர்களாக பல ஆயிரங்களைக் கொண்ட எண்ணிக்கையுடையவர்கள் காணப்படுகிறார்கள். இவர்களின் சேவையையும், ஈகத்தையும் தனித்தனியே குறிப்பிட்டுச் சொல்வது என்பது முடியாத தொன்றாகும். எம் தேசிய விடுதலைக்காக தம்முயிரைக் கொடுத்துப் போராடிய மாவீரர்களை நாம் என்றுமே மறந்து விடலாகாது. மாவீரர்களை மட்டுமன்றி இன விடுதலைக் காக, அடக்கு முறைகளுக் கெதிராகப் போராடி பல்வேறு தியா கங்களைச் செய்து தமிழ் மக்கள் மனதிலே பதிந்து விட்ட தேசப் பற்றாளர்களையும் தமிழ் இனம் உள்ள வரை மறந்து விடலாகாது.

ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய காலத்தில் இருந்து இன்று வரையான காலப்பகுதி வரை தேசப்பற்றாளர்கள், தியாகிகள் தம் வாழ்நாளை தேசச் சேவைக்காகத் தன்னலம் துறந்து செய்து கொண்டவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். அந்த வரிசையிலே ஒருவராக ஒரு குடும்பப் பெண்மணியாக இருந்து அகிம்சை வழியிலே போராடி தமது உயிரைத் தியாகம் செய்த அன்னை பூபதியை தமிழ் மக்கள் தமது இதயங்களிலிருந்து நீக்கி விட முடியாது. அதிலும் குறிப்பாக ஒரு பெண்ணாக இருந்தும் வயது சென்ற நிலையிலும் உண்ணா விரதம் இருந்து தனது உயிரைத் தியாகம் செய்வதற்கீடான துணிவு என்பது மனிதப்பிறவிகளில் சாதாரண நிலையில் ஒருவராலும் சாதிக்க முடியாததாகவே பார்க்கப்பட வேண்டியதொன்றாகும். அன்னை பூபதியின் கொடை, ஈகம், அர்ப்பணிப்பு தொடர்பாக திரும்பவும் திரும்பவும் கூறிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஆனால் அவரின் தியாகம் தான் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

அன்னை பூபதி அவர்கள் ஒரு அடக்குமுறைச் சூழ்நிலையில் வீரமிகு போராட்டம் ஒன்றிலே தனது இன்னுயிரை ஈய்ந்தவர் அதாவது இந்திய வல்லாதிக்கப் படையினதும் தேசவிரோதச் சக்திகளினதும் அச்சுறுத்தலுக்கும் சூழ்ச்சிகளுக்கும் மத்தியில் அவர் தனது போராட்டத்திலே உறுதியாக நின்றார். ஒன்றல்ல இரண்டல்ல 31 நாட்கள் அந்த உறுதியை வெளிப்படுத்தினார்.

மக்கள் படும் துன்பத்தைக் கண்டு தனது இனத்தின் தன்மானத்தை மனதில் கொண்டு பெரும் படைக்கு எதிராக உறுதியான போர்தொடுத்தார். இந்திய தேசம் எவ்வகையான அறப்போரை தனது குறியீடாக இன்றும் வெளிப்படுத்தி நிற்கிறதோ, அது தனது சுதந்திரத்திற்கு எத்தகைய போரை நடத்தியதாகப் பெருமைப் படுகிறதோ அதே வழிமுறையில் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்து அதனைத் தலைகுனிய வைத்தார்.

அன்னை பூபதியின் பெரும் தியாகத்தின் மூலம் பெண்ணினமே தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய நிலை தோற்று விக்கப்பட்டிருக்கிறது.

இதனை விட சாதாரண மனித வாழ்க்கையிலே தமது வாழ்க்கை முன் மாதிரிகளின் மூலமும் தமது சேவைகளைத் தன்னலம் துறந்த நிலையிலே நின்று செய்து முடித்த தேசப்பற்றாளர்களும் இந்நாளில் நினைவு கூரப்பட வேண்டியவர்கள் தமிழ் மக்கள் தமது இதயங்களில் இவர்களை நிறுத்தி வைத்து கௌரவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஏனெனில் இன்றும் எமது தமிழீழ மக்கள் மத்தியிலே இருந்து சேவையாற்றிய பல மனிதர்கள் பெரியவர்கள், கல்விமான்கள் என்பவர்கள் தேசப்பற்றாளர்களாக கௌரவிக்கப்பட்டு வருகிறார்கள். சிறிலங்கா அரசின் பல்வேறு அடக்கு முறைகளாலும் கொடுமைப்படுத்தல்களாலும் பாதிக்கப்பட்ட நிலையிலே தமிழ்மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கையில் இவர்கள் மத்தியிலே சமூகப் பணிகளில் திறம்படச் செயலாற்றி மக்களுக்குச் சேவை செய்வதவர்கள் இன்று தமிழீழத் தேசியத் தலைமையினால் மாமனிதர்களாகவும், நாட்டுப்பற்றாளர்களாகவும் கௌரவிக்கப்பட்டு வருகிறார்கள். இது காலத்தின் தேவையறிந்து தேசியத் தலைமை செய்து வரும் சிறந்ததொரு பணியாகும்.

கல்வித்துறையிலே, மருத்துவத்துறையிலே, எழுத்துலகத்திலே, அரசியல்துறையிலே பல்வேறு விடயங்களிலும் திறமையுடன் தமது மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் செயற்பட்டவர்கள் இவ்வாறு நாட்டுப்பற்றாளர் களாகப் பெருமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்கள் குடும்பச் சுமையை ஒரு தோளிலும், போராட்டச் சுமையை இன்னொரு தோளிலுமாகச் சுமந்து தமது நாட்டுக்குச் சேவையாற்றினர்.

தமது அன்றாட வாழ்வுடன் பின்னிப்பிணைந்ததாக போராட்ட வாழ்விலும் தமது பங்களிப்பைச் செய்தனர். இவ்வாறானவர்களின் ஈகம் தான் போராட்டம் விரைந்து வளர்ச்சி பெறக்காரணமாக இருந்து வருகின்றது. மக்கள் பணியை முதன்மையாக மேற்கொண்டு தேசம் தனது இயல்பான நிலையிலே செயற்பட இவர்கள் வழிவகுக்கின்றனர்.

இவர்களின் ஈகத்தையும் அன்னைபூபதியை நினைவு கூரும் நாளிலேயே ஒரு சேர நினைவு கூர்ந்து வருகிறோம். இவர்களின் ஈகம் எம்மக்களுக்கு என்றும் புத்துணர்ச்சியையும் நாட்டுப் பற்றையும் உருவாக்கிக் கொண்டேயிருக்கும்.


-ஸ்ரீபன்

## எம்பூபதி அகிம்சையின் அதிபதி

அன்னை பூபதி!
எல்லோர் மனதிலும் வாழ்ந்திடும் மாநதி
எட்டப்பன் கூட்டம் ஆட்டம் அடக்கிய பெண்மணி.
இன்று பூபதி வாழ்ந்திடும் வடிவம் எமக்கு வெகுமதி.

நெருப்பதைத் தின்று நிலவாகிச் சிரித்தவள்
நெஞ்சறை அதிர்ந்திட தீயாய் எழுந்தவள்-கண்ணீர்
அகற்றிட அகிம்சை ஆயுதம் தாங்கியவள்.

பாரத வெறிப்படை மனதில் தீயென ஆனவள்
குறி தவறிடா இலக்கினில் பார்வையை வீசினாள்.
தாயாய் இருந்திடும் வலிமை கொண்டதெம்-வல்ல
பூபதி வடிவம் என்றும் உலகிலே அதிசயம்.



திலீபனை கொன்றவன் வெறிதனல் அடக்கிட
சீறிடும் புலிப்பலம் பாரினில் சுடர்விட
தொடர்ந்திடும் கொடுமையை நெருப்பதில் பொசுக்கிட
மாமங்க வீதியிலே நெருப்பதை தின்று உடல் வெந்தாள்.

ஆயுதம் காட்டி அடக்கியோர் முன்னால்
ஆயிரம் புதுப்பலம் கொண்ட தாயவள் பூபதி-எம்
நீர் ஒழுகிடும் விழிகளில் நிமிர்ந்திடும் வலிமை பெற்றவர்
இவளே இன்று உலகிலே அகிம்சையின் அதிபதி!

– மரியதாசன் –அருள்யோன்சன்

## சரித்திரத்தில் பதிந்த அன்னை

சிங்களத்து கொடும் வாள்கள்
எம்மினத்தை அழித்த வேளை
தன்னினத்தின் விடிவிற்காய்
தணல் குளித்த எம்புலியால்
தலைகுனிந்த பகையரசு
இந்தியத்தை அழைத்ததிங்கு

வஞ்சகத்தை சுமந்தபடை
வந்திறங்கி வதைசெய்ய
நெஞ்சுபொறுக்கா எம்அன்னை
நெடுந்தவம் புரிந்தாள் அன்று

பாரதத்தின் கபடமதை
பார்புரிய வைப்பதற்காய்
வீரத்தமிழ்ப் பெண்ணாய்
விரைந்தாள் பூபதித்தாய்
பெண்ணின விடிவு பெற்று
தன்னின விடிவு காண
தவம் சென்ற எம் அன்னை
சரித்திரத்தில் பதிவானாள்

முத்தையனூர் துஷ்யந்தன்



## என்றும் பூபதியாய் வீற்றிருப்பாய்!



ஈழம் போற்றும்-எம்
ஈழத்தின் விடிவெள்ளியே
கயவர் பலமடக்கிய
குலக்கொடியே –அன்னை பூபதியே!

அகிம்சைக்குப் பேர் போனவளே
அன்னியனின் கொட்டம் அடக்கிய-அன்னையே
இரண்டம்சக் கோரிக்கையை
அம்மா நீ முன்வைத்து
ஈழத்தின் விடிவிற்காய்
உதிர்ந்திட்ட பூபதியே!

ஆண்டுகள் பதினேழு ஆனாலும்
ஆறிடுமோ உன்-நினைவு
திலீபனின் வழியிலே-அம்மா நீ
தியாகம் தான் புரிந்தாயோ!

தமிழீழ மண்ணிலே மலர்ந்திட்ட
மாந்தர்கள் அனைவரும்
உன் நிலை கண்டு பரிதவித்து நின்றனரே-
அன்று
பாரதத்தின் கொடுமையதை
பாரறிய வைத்தவளே
பார் போற்றும் பரணியிலே-என்றும்
பூபதியாய் வீற்றிருப்பாய்.

–தி.தீபா

*இந்தநிலையில்* அந்த ஒழுங்குபடுத்தல் களை செய்துவிட்டு வடமராட்சி கிழக்கு நிலைமையை பார்ப்பதற்காக வடமராட்சி கிழக்கிற்கு போனேன்.

அங்கும் நிலமைகள் மோசமாக இருந்தது உயிரிழந்தவர்களின் தொகை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டிருந்தது. அன்றைய நிகழ்வு மீளமுடியாத ஒரு நிகழ்வாக இருந்தது. நான் வடமராட்சி கிழக்கிற்குப் போனபோது அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பிரியன், அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரி, பெண்போராளிகள்,தமிழீழகடற்படைத் தளபதி மங்களேஸ், சலீம், காதர் உட்பட்டவர்கள் னும் வந்திருந்தார்.

இப்படியாக கடல்கோளால் இறந்து

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

போன வடமராட்சி கிழக்கு மக்களின் உடல் களை வடமராட்சி கிழக்கிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில் புதைப்பதென முடிவு செய்தோம். அதற்குரிய வேலை


அறிந்திருந்தார். என்றாலும் உயிரிழப்புக்களின் முழுமையான விபரம் கிடைக்கவில்லை. நூறு, இருநூறு என்று அதிகரித்துக்கொண்டு போனதே தவிர முழுமையான விபரம் தெரியாமல் இருந்தது.

நிலைமை இப்பிடி இருக்க நான் உருக்குலைந்து போன முல்லைத்தீவிலும், வடம தார்.

1986 ஆம் ஆண்டு சியாமாசிற்றி விமானம் குண்டு வீச்சு நடத்துகின்ற காலத்தில் "குண்டுவீச்சில் இருந்து எப்படித் தப்புவது என்ற அறிவுறுத்தல்களை உள்ளடக்கி "போர்க்குரல்" என்ற பெயரில் அண்ணையின் பணிப்பிற்கிணங்க கிட்டண்ணையின் ஊடாக அச்சிட்டு வழங்கப்பட்டது.

எப்படி எல்லாம் மக்களைக் காப்பாற்ற முடியும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த அண்ணையால் இப்படியான ஒரு பெரும் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. அதனால் அவர் தனது பாதுகாப்புக்காக

**ஒரு கட்டத்தில் நான் அண்ணையை போய்ச் சந்தித்தேன் நான். போய்ச் சந்திக்கின்ற பொழுது அண்ணை நிலைமைகளை அறிந்திருந்தார். இருந்தாலும் உயிரிழப்புக்களின் முழுமையான விபரம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் உருக்குலைந்து போன முல்லைத்தீவிலும், வடமராட்சி கிழக்கிலும் நின்று நிலைமைகளை அவதானித்த வகையில் உயிரிழப்புப் பற்றிய அண்ணளவான மதிப்பீட்டைச் செய்திருந்தேன். அதன்படி முல்லைத்தீவில் மூவாயிரம் பேரும், வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து ஐந்நூறு பேரும் இறந்து போனார்கள் என்ற எனது அண்ணளவான மதிப்பீட்டை அண்ணையிடம் சொன்னேன். என்னால் எடுக்கப்பட்ட மனித இழப்புத் தொடர்பான அந்த மதிப்பீட்டை அண்ணையால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. நீண்டகால போரில் கூட இவ்வளவு மக்களை சொற்ப நேரத்தில் நாங்கள் இழக்கவில்லை. ஆனால் கடற் கோள் இப்படி பெரும் இழப்பை ஏற்படுத்திவிட்டது என்ற தவிப்பு அவரிடம் இருந்தது. ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களை தவிர்ப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்ற அண்ணையால் இப்படி ஒரு பெரும் இழப்பு ஏற்பட்டதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது என சுனாமி கடற்பேரலைகளால் பேரிழப்பைச் சந்தித்த முல்லை. நகரின் மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொண்டிருந்த தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்தார். அவர் பகிர்ந்தவை இன்றைய பகுதியிலும்........**




# குறுகிய நேரத்தில் ஏற்பட்ட பேரிழப்பை அண்ணையால் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது

நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இந்நிலையில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தளபதி கேணல் தீபன் ஆகியோர் நிலைமைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தனர். அங்கும் நிலைமை மோசமாய்த்தான் இருந்தது. உடல்கள் நேரத்துக்கு நேரம் அதிகரித்துக் கொண்டிருந்தது. வீதியை விட்டுக் கிராமங்களுக்குள் போக முடியாத அளவுக்கு கட்டடங்கள், மரங்கள் அனைத்தும் இடிந்தும் முறிந்தும் போய்க் கிடந்தன. அதற்குள்ளாலும் மீட்புப்பணிப் போராளிகள் உடல்களை மீட்டுக் கொண்டிருந்தனர்.



## பகுதி-55

சில இடங்களில் மக்கள் தமது உறவுகளின் உடலை உயிரிழந்து போன இடங்களில் புதைத்து விட்டு ஓடி வந்துவிட்டார்கள். அவ்வாறு புதைத்துவிட்டு வந்த உடல்களையும் மீட்புப்பணிப் போராளிகள் தேடிப்பிடித்து அவற்றை மீண்டும் தோண்டி எடுத்து வந்தனர்.

நிலைமைகளை அவதானிப்பதற்காக அப்போதைய யாழ்ப்பாண அரச அதிபர் பத்மநாத

கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அதில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களையும், உயிர் தப்பிய மக்களையும் மீட்கின்ற வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்நிலையில் நான் வடமராட்சி கிழக்கில் இருந்து மீண்டும் முல்லைத்தீவிற்கு வந்துவிட்டேன்.

மீட்பு நடவடிக்கைகளுக்குரிய எந்த உதவியும் அரசிடம் இருந்து வரவில்லை அதனால் எங்களிடம் இருந்தவற்றை வைத்து ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தோம். மருத்துவப்பிரிவினர் கைஉறைகள் (கிளவுஸ்) வழங்கி மற்றும் நோய்த்தொற்று ஏற்படாதபடி டைசோல் போன்றவற்றை அடித்துக்கொண்டிருந்தனர். நிர்வாக சேவையின் பங்கு - குறிப்பாக முரளியின் பங்கு - அதிகமாக இருந்தது. அரசியல்துறையினர் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விநியோகித்துக் கொண்டிருந்தனர். இதில் முகுந்தனின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

ஒரு கட்டத்தில் நான் அண்ணையைப் போய்ச் சந்தித்தேன். நான் போய்ச் சந்திக்கின்ற பொழுது அண்ணை நிலைமைகளை

ராட்சி கிழக்கிலுமாக நின்று நிலைமை களை அவதானித்த வகையில் அண்ணளவான உயிரிழப்பு மதிப்பீட்டைச் செய்திருந்தேன்.

அதன்படி முல்லைத்தீவில் மூவாயிரம் பேரும் வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து ஐந்நூறு பேரளவிலும் இறந்து போனாகள் என்ற எனது அண்ணளவான மதிப்பீட்டை அண்ணையிடம் சொன்னேன்.

என்னால் கொடுக்கப்பட்ட அந்த மதிப்பீட்டை அண்ணையால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது. நீண்டபோரினால் கூட இந்தளவு மக்களைக் குறுகிய நேரத்தில் நாங்கள் இழக்கவில்லை. ஆனால் கடல்கோள் வந்து இந்தளவு இழப்பை ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கிறது என்ற தவிப்பு அவரிடம் இருந்தது.



யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதைகள் எல்லாம் அரச படைகளால் தடைசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த சூழலில் கிளாலிக் கடல் நீரேரியூடாக மக்கள் போக்குவரத்தை ஒழுங்கு செய்து நடத்திக் கொண்டிருந்தோம். அந்தப் பயணத்தின் போது மக்களுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்பதற்காக எங்களை அந்த இடத்தில் நின்று செயற்படுமாறு கூறியிருந்தார். அதேபோலத்தான் யாழ்.இடப்பெயர்வின் போதும் மக்களுக்கு எந்தப்பாதிப்பும் வராமல் பயண ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்று பணித்திருந்த போராளிகளைக் கூட அனுப்பி எதையும் எதிர்பார்க்காமல் எங்களிடம் இருக்கிற அனைத்து வளங்களையும் பயன்படுத்தி விரைவாக நடவடிக்கையைச் செய்துமுடிக்குமாறு கூறினார். அத்துடன் அனைத்துத் துறைசார் பொறுப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கி நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தினார்.

**அ.லோகீசன்**

சுனாமி அழிவுக்களத்தில் நின்று கொண்டு எவருக்கும் என்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்றோ அல்லது என்ன தேவைப் படுகிறது என்றோ சொல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை. எல்லாத் தேவைகளையும் இனங்கண்டு அதற்குரிய ஒழுங்குகளை ஒவ்வொரு பிரிவினரும் செய்து கொண்டிருந்தனர் என்றார் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள்.

அவர் பகிர்ந்த சுனாமிக்கள மீட்பு அனுபவம் அடுத்த பகுதியிலும் வெளிவரும்

தொடரும்.




# விளாசல் மன்னன்




**உலகின்** கிரிக்கெட் போட்டிகளில் பந்து எல்லைக் கோட்டுக்கு மேலாக செல்லுமாறு விளாசுவோர் இருக்கின்றனர். அந்த வகையில் இலங்கையில் சனத் ஜெயசூரியா, இங்கிலாந்தின் பிளின்டொப், இந்தியாவின் கங்குலி, டெண்டுல்கர்,கிறிஸ் கெயான்ஸ் போன்றோர் காணப்படுகின்றனர்.

இவர்கள் ஆறு ஓட்டங்களை (சிக்சர்) பெற்ற வேகத்தை விட தற்போது கூடிய வேகத்தில் ஆறு ஓட்டங்களை அதிகமாகப் பெற்ற வீரர் என்ற சாதனையை பாகிஸ்தானின் சகிட் அப்ரிடி பெற்றுள்ளார்.

அவர் அண்மையில் இந்தியாவுக்கு எதிராக கான்பூரில் பெற்றுக் கொண்ட ஆறு ஓட்டங்களோடு சாதனைப் பட்டியலில் முன்னணி வகிக்கிறார்.

அப்ரிடியின் முதலாவது சாதனை சிறிலங்காவுக்கு எதிராகப் பெற்ற 37 பந்துகளில் பெற்ற சதமாகும். முரளிதரனின் பந்தில் 73 ஓட்டங்களையும், ஜெயசூரியாவின் பந்தில் 94 ஓட்டங்களையும் பெற்ற பெருமையும் அப்ரிடிக்கு உண்டு.

அவர் கான்பூரில் அடித்த ஒன்பது சிக்சர்கள் இதுவரை ஒரு நாள் போட்டிகளில் யாரும் பெற்றுக் கொள்ளாத ஒன்று என்பது இனி மேலும் பெற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியையும் எழுப்பு கிறது.

இதுவரை பிளின்டொப்பே ஆறு ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் சராசரியில் முன்னணி வகித்து வந்தார். அடுத்ததாக ஜெயசூரியா இரண்டாம் இடத்தில் இருந்தார்.

ஆனால் இவர்களையெல்லாம் பின்தள்ளி விட்டு அப்ரிடி முதலாம் இடத்தைப் பிடித்து விட்டார். பிளின்டொப் 71 போட்டிகளில் 73 சிக்சர்களைப் பெற்றிருந்தார், அப்ரிடி அதனைவிஞ்சுகின்ற வகையில் 195 போட்டிகளில் 204 சிக்சர்களை அடித்துள்ளார்.

அப்ரிடிக்கு நேர்த்தியாக வீசப்படும் பந்தாயினும், எகிறி அச்சுறுத்தும் பந்தாயினும் அவரின் துடுப்பாட்டத்துக்கு அவை அடிபணிந்து சென்று விடுகின்றன. அவரது கண்களும் மனமும் கைகளும் ஒரே நேரத்தில் செயற்பட்டு எவ்விதமான பந்தையும் நிலை குலையச் செய்கின்றன. இது போட்டிகளில் வெற்றி பெற இலகுவாக அமைந்து விடுகின்றது.

அசைக்கமுடியாத அவரது பலம் எந்த நாட்டிலும் வெற்றி தேடித்தரும். அத்துடன் அணிக்கு தலைமைத்துவத்தையும் பெற வாய்ப்பளிக்கும்.

**வடிவேல்**

# இவர் பணி எதுவரை

**இந்திய** கிரிக்கெட் அணிக்கு இரு வழிகளில் திறன் வாய்ந்த புதிய வீரர் அறிமுகமாகியுள்ளார். அவர் வேறு யாருமல்ல இந்தியாவின் விக்கெட் காப்பாளர் மகேந்திரா தோனி.

23 வயதாகும் தோனி கிரிக்கெட்டுக்கு அறிமுகமாகும் முன்பு சிறந்த கால்பந்தாட்ட வீரராக திகழ்ந்தார். அங்கும் அவர் கோல் காப்பாளராக சிறந்து விளங்கினார். இவரது இந்த திறமையை அவதானித்த அவரது பயிற்சியாளர் இவர் சிறந்த விக்கெட் காப்பாளராக பணியாற்றலாம் என்பதை உணர்ந்ததுடன் இந்திய கிரிக்கெட்டில் அப்போது தலை தூக்கியிருந்த விக்கெட் காப்பாளர் பிரச்சினைக்கு முடிவு காண எண்ணினார்.

அதன்படி தோனி கால்பந்தாட்டத்துக்கு முழுக்குப் போட்டு விட்டு கிரிக்கெட்டில் நுழைந்தார். இதனால் அதுவரை விக்கெட் காப்பாளராக பணியாற்றிய ராகுல்ராவிட்டுக்கு அப்பணியிலிருந்து ஓய்வளிக்கப் பட்டது.

1994 ஆம் ஆண்டில் கால்பந்தாட்டத்திலிருந்து கிரிக்கெட்டுக்கு நுழைந்த தோனி பீகார் மாநிலத்தின் 16 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியில் இணைந்தார். எனினும் அப்போது அவர் கால்பந்தாட்டத்தை முற்றுமுழுதாக ஒதுக்கிவிடவில்லை என்று தெரிவித்தார்.

16 வயதுப்பிரிவு அணியில் இவர் செயலாற்றிய விதம் கண்டு இவருக்கு உள்நாட்டில் உயர்தர போட்டியான ரஞ்சி



கிண்ணப் போட்டி களில் பங்கேற்று வந்தார். அதே வளர்ச்சியுடன் தற்போது தேசிய அணியில் இடம்பிடித்துள்ள தோனி முதலில் பங்கேற்ற நான்கு போட்டிகளிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடாத போதும் ஐந்தாவதாக விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான இரண்டாவது போட்டியில் அபாரமாக ஆடி 123 பந்துகளில் 16 பவுண்டறிகள், நான்கு சிக்சர்களுடன் 148 ஓட்டங்களைப் பெற்றார். மூன்றாவது போட்டியிலும் 23 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். துடுப்பாட்டத்தில் காணப்படும் வேகம் விக்கெட் காப்பாளர் பணியிலும் காணக்கூடியதாகவே இருக்கின்றது என்பதை பயிற்றுனர் ஜோன் ரைட் பாராட்டியுள்ளார். ஆனாலும் அடுத்த போட்டிகளில் அவரால் தொடர்ந்து சோபிக்க முடியவில்லை. இதனால் அவர் அணியில் நிலைத்திருப்பது தொடர் பில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் எதுவரை அவ ருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்

விக்கெட் காப்பாளர் பணிக்கு பார்த்திவ்பட்டேல், டினேஸ் கார்த்திக் ஆகியோரின் பெயர்களும் அடிபட்டாலும் இறுதியில் தோனியை முடிவு செய்தார்கள். இவர் அண்மையில் நிறைவு பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் சதமடித்து அசத்தினார். ஆனாலும் ஏனைய போட்டிகளில் பெரிதாக சோபிக்கத் தவறிவிட்டார். இது துரதிர்ஷ்டம்தான் ஆனாலும் கிரிக்கெட்டில் கில்கிறிஸ்ட்டைப் போலவும், கால்பந்தாட்டத்தில் டேவிட் பெக்காம்,சினடின் சிடான் போன்றோரைப் போலவும் இனிவரும் காலங்களில் இவர் செயற்படுவார் என நம்புவோமாக.

# முதன்மையானவள்

**ஏழாவது** மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் கடந்த வாரம் நிறைவு பெற்றது. இதன் இறுதிப் போட்டியில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் மோதின. இதில் பலமான




அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது.

இதில் இறுதிப் போட்டி வரை இந்திய அணியை அழைத்துச் சென்ற பெருமை அணித்தலைவர் மித்தாலி ராகைஜயே சாரும்.

பத்து வயதில் துடுப்பாட்ட மட்டை பிடித்தவர் இன்று இந்திய அணித் தலைவியாக உயர்ந்துள்ளார்.

இவரது சமீபத்திய சாதனை இந்திய அணியை முதல் தடைவையாக உலகக் கிண்ண போட்டியின் இறுதிப் போட்டிக்கு அழைத்து சென்றமை ஆகும் இது ஆசிய நாடொன் றின் முதல் பிரவேசமாக அமைகின்றது.

ஏறக்குறைய ஆண்கள் உலகக் கோப்பை தொடர் போன்றே பலமான அவுஸ். அணியை இந்திய அணி சந்தித்தது என்பது தான் உண்மை.

இதற்கு அனைத்து வீராங்கனைகளின் கூட்டு முயற்சி என்றாலும் அணித் தலைவி மித்தாலியின் பங்கு கூடுதலாகவுள்ளது.

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீராங்கனைகளில் இவரும் ஒருவர். அத்துடன் பெண்கள்டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரட்டை சதமடித்த ஐந்தாவது வீராங்கனை என்ற பெருமை பெற்றவர். இதனை விட பெரிய சாதனை ஒன்றும் அவர்கைவசம் உள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் சர்வதேச அளவில் அவர்அதிக ஓட்டங்களை பெற்றுள்ளார் இங்கிலாந்துக்கு எதிராக 2002 இல் இவர் எடுத்த 214 ஓட்டங்கள். இப்படியாக இவரின் பங்களிப்பு இந்திய மகளிர் கிரிக்கெட்டிற்கு சாதாரணமானதல்ல.

இதனை விட இவர் ஒரு சுழல்பந்து வீச்சாளராகவும் திகழ்கின்றார். அருமையான அணித்தலைவி மேலும் பிரகாசிக்க வாழ்த்துக்கள்


**கடந்த** 50 நாட்களுக்கு மேலாக கிரிக்கெட் ரசிகர்களை ஆக்கிரமித்திருந்த மெஹகா கிரிக்கெட் தொடர் ஒன்று முற்றுப் பெற்றுள்ளது. அனுபவம் அனுபவமின்மை போன்ற கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாற் போல் ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி கைப்பற்றி விமர்சனங்களுக்கு ஆப்பு வைத்து வெற்றி வாகையுடன் வீடு திரும்புகின்றது.போட்டித் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றி விட்டதா என்று கேட்பதற்கு ஆச்சரியமாக இல்லையா? ஏனெனில் முதல் இரு போட்டிகளையும் அடுத்தடுத்து வென்று ஏப்பமிட்ட இந்திய அணி அடுத்த நான்கு போட்டிகளிலும் தொடராக தோல்வியை தழுவியது என்றால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

பலமான துடுப்பாட்ட வரிசை, அனுபவ பந்து வீச்சு வரிசை, சொந்த நாட்டு ரசிகர்களின் ஆதரவு என்று அனைத்தும் இருந்தும், இந்திய அணியால் தொடரைக் கைப்பற்ற முடியவில்லை என்பதுடன், சமன் செய்ய கூட முடியாது போனது என்றால் வேதனைக்குரியதே.இதற்கு யாரைக்குறை கூறுவது, யாரையுமல்ல பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமையும் அவரின் வீரர்களையும் மெச்சுவதே பொருத்தமானது.

அவர்கள் வெற்றிக்காக ஒவ்வொரு நொடிப் பொழுதும் போராடினார்கள் என்பது மறுக்கப்படமுடியாத உண்மை. ஏனெனில் 316 என்றவெற்றி ஓட்ட இலக்கை எட்டிப்பிடித்து வெற்றி பெற்றதை உதாரணமாகக் கொள்ளலாம். இதில் இறுதிப் பந்துவீச்சு வரை வெற்றியில் உறுதியாக இருந்த அணித்தலைவர் இன்சமாமை பாராட்டாமல் இருக்க முடியாது.இந்த உணர்வு இந்திய வீரர்களிடம் காணாமல் போனதை நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறதுதானே? இது வீரர்களின் ஒற்றுமையின்மையா? அன்றி பொறுப்பற்றதனமா? என்ற கேள்விகளை பலமாக எழுப்புகின்றது. இது இந்திய அணியில் மறுசீரமைப்பு ஒன்று விரைவாக ஏற்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் தொடரை சமன் செய்வதற்கு டில்லியில் நடைபெற்ற இறுதிப் போட்டி எஞ்சியிருந்த போதும் அப்போட்டியை பொறுப்பற்ற முறையில் ஆடி பரிதாபமான முறையில் தோற்றதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அப்போட்டியை வெல்வதற்கு அன்றி கௌரவமாக தோற்பதற்கு பாகிஸ்தானிடம் இருந்தாவது இந்தியாபாடம் கற்றிருக்கவேண்டும்.

இந்த நிலையில் இந்திய அணி தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் நகைப்புக்கிடமான கருத்துக்களே வலுப்பெற்றுள்ளது. எனவே இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க இந்தியஅணி தயாராவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே ரசிகர்கள் மட்டத்தில் மாறியுள்ளது. இது இவ்வாறிருக்க, பாகிஸ்தான் அணியின் இத்தொடர் வெற்றியானது அவ்அணிக்கு நற்பெயரை ஏற்படுத்தியுள்ளதுடன் அணியில் கூட்டு முயற்சியின்மை, ஒற்றுமையின்மை என்பவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அதற்கும் மேலாக சிறப்பான அணித்தலைவர் இன்சமாம் என்பதையும் உணரவைத்துள்ளது.



# செயற்படாத கட்சிகளைதடைசெய்ய பெரும்பான்மைக் கட்சிகள் முட்டுக்கட்டை!

## -தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் செயற்படாத அரசியல் கட்சிகளை தடைசெய்வது தொடர்பில் தேர்தல் திணைக்களம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள பிரதான பெரும்பான்மைக் கட்சிகளின் தலையீட்டினாலே தேர்தல் திணைக்களத்திற்கு இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது 51 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 24 கட்சிகள் மட்டுமே செயற்பட்டு வருகின்றன. ஏனைய கட்சிகள் செயற்பாடுகள் இன்றி முடங்கிப் போயுள்ளன. எனவே செயற்படாத கட்சிகளைத் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. ஆயினும் பெரும்பான்மைக் கட்சிகளின் தலையீட்டினால் இந்நடவடிக்கையினை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளவத்தைப் பொலிசாரால் மூன்று சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு தெகிவளை வெள்ளவத்தை எல்லைப்பகுதியிலுள்ள வாய்க்காலிலிருந்து இளம் பெண் ஒருவரது சடலம் உட்பட மூவரது சடலங்களை வெள்ளவத்தைப் பொலிசார் மீட்டுள்ளனர்.

சுமார் 25 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட பெண்ணின் சடலமும், இரண்டு சிறுவர்களின் சடலங்களையுமே வெள்ளவத்தைப் பொலிசார் நேற்று முன்தினம் அதிகாலை மீட்டனர்.

மேற்படி சடலங்கள் நேற்று முன்தினம் மாலை வரை அடையாளம் காணப்படவில்லையெனவும் இவர்கள் பாலத்தில் இருந்து நீரோடையில் குதித்துள்ளதாகச் சந்தேகம் எழுந்துள்ளதென வெள்ளவத்தைப் பொலிஸ குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி டீ.பி.விஜய விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரம் நுவரவாவியில் நான்கு கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

அநுராதபுரம் நுவரவாவியிலிருந்து நான்கு கைக்குண்டுகளை பொலிசார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்; பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் கே 400 ரக கைக்குண்டு ஒன்றும் அடங்குவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினரின் குண்டுகள் செயலிழக்கும் பிரிவினர் இந்தக் கைக்குண்டுகளை செயலிழக்கச் செய்யப்பட்டது.

## மூவர் கைது

இந்திய மீனவர்கள் மூவர் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவின் தமிழ் நாடு இராமேஸ்வரம் பகுதியிலிருந்து ஈழத்தமிழ் அகதிகளை அழைத்து வரும் போதே இவர்கள் கைதாகியுள்ளனர். இவர்களுடன் மூன்று இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(32)

# சனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை ஐ.ம.சு.முன்னணி நிறுத்தினாலே வெற்றி வாய்ப்பு

## -லங்கா சமசமாஜக்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொதுவேட்பாளரை தெரிவு செய்ய வேண்டுமென லங்கா சமசமாஜக்கட்சி கேட்டுள்ளது.

இதன் மூலமே ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்க முடியுமென அந்தக்கட்சி தெரிவித்துள்ளது. கட்சியின் குறிப்பு ஒன்றில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தற்போது தமது கட்சி சனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதாக அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

எனவே முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் இதற்கு ஆதரவு தரவேண்டுமென லங்கா சமசமாஜக்கட்சி கேட்டுள்ளது.

# ஐ.தே.க.பா.உ அலுவலகத்தில் பாதாள உலகக் குழுத்தலைவர் கைது

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக்குழுத் தலைவரொருவரை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திலிருந்து கைது செய்திருப்பதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் பெரேராவின் சிலாபம் அலுவலகத்தை திடீர் சோதனையிட்டதாகவும், இதன்போது கடந்த சில காலமாகத் தேடப்பட்டு வந்த பிரபல பாதாள உலகக்குழுத்தலைவர் பலத்தர ஜெகத் என்பவர் கைதுசெய்யப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழுத் தலைவர் பலத்தரஜெகத் பல கொலைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரெனவும், குட்டிகல பிரதேச மக்கள் வங்கியில் கொள்ளைச் சம்பவத்தில், வங்கியின் முகாமையாளரைக் கொலை செய்திருந்தாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# சீனப்பிரதமரின் குழுமீது சரத் அமுனுகம பாய்ச்சல்

(கொழும்பு)

சீனப் பிரதமரின் குழுவொன்று அண்மையில் நிதியமைச்சர் சரத் அமுனுகமவை அவரது அமைச்சில் சந்திக்கச் சென்ற வேளை அமுனுகம அவர்களை ஏசியனுப்பியதாக சீனப்பிரதமரிடம் புகார் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

சீனாவின் ஆதரவுடன் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நுரைச்சோலை அனல் மின்நிலையம் நிர்மாணிப்பது தொடர்பாக பேச்சு நடத்தச் சென்ற வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு சீன அரசு கடன் வழங்க முன்வந்துள்ள நிலையில் இதனைத் தனியார் மயப்படுத்த அனுமதிக்குமாறும் அல்லது சீன நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்குமாறும் தூதுக்குழுவினர் கோரியபோதே அமைச்சர் அவர்களைக் கடும் தொனியில் பேசியுள்ளார். எனினும் இதற்காக எரி பொருட்கள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சீனப்பிரதமரிடம் மன்னிப்புக் கோரியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# மேல்மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக ஜே.வி.பி வாக்களிக்கும்

எதிர்வரும் 28 ஆம் திகதி மேல் மாகாண சபையில் நடைபெறவுள்ள முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது ஜே.வி.பி முதலமைச்சருக்கு ஆதரவாக வாக்களிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் வகையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள பல குற்றச்சாட்டுகளின் பேரிலான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தம்முடன் கலந்தாலோசிக்கவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளது .

எனினும் வாக்களிப்பின் போது அந்தக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து வாக்களிக்கவுள்ளது.

இதேவேளை தமக்கெதிரான குற்றச்சாட்டுகளை மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் அடிப்படையற்றவை என மறுத்துள்ளார்

# நுரைச்சோலை அனல் மின்திட்டத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின்சாரத் திட்டத்திற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்பதெனவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மேதின நிகழ்வின் போது மலையகக் கட்சிகள் மேல் கொத்மலைத் திட்டத்தை முன்னிலைப்படுத்தவுள்ளன. புதிய சனநாயகக் கட்சி இதற் கான தீவிர முனைப்பில் ஈடுபட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பன இந்தத் திட்டத்தை வரலாற்றுத் தவறு என அந்தக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது எனவே எதிர்வரும் மேதினத்தில் மலையக மக்கள் தமது இருப்பை பாதுகாக்கும் முயற்சியின் வெளிப் பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

### வெளிநாட்டு உதவி அபிவிருத்திக்கு பயன்படுமாம்

வெளிநாட்டு உதவி இலங்கையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுமென அரசு அறிவித்துள்ளது. வெளிநாட்டு உதவிப் பயன்பாட்டில் எழுந்துள்ள குறைபாடுகளை நாம் கவனத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளோம் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.


கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம், கிளிநொச்சி.

**கூலித்தொழிலாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்**

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பொருட்கள் ஏற்றி இறக்குவதற்கு கூலியாட்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் கடமை நேரத்தில் சங்க அலுவலகத்தில் விண்ணப்பத்தினைப்பெற்று 30.04.2005ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

A11640)



**5 ஆம் ஆண்டு நினைவு மலர்**



பிறப்பு:- 1984. 02. 25

வீரச்சாவு:- 2000. 04. 19


திருநாவுக்கரசு ஜசிந்திரன் (ஜஜன்)
வீரவேங்கை - புரட்சி வள்ளல்

தரணி தனில் ஒளி தந்த குமரனே
நீ தந்த துன்ப இருள் இன்னும் விலகவில்லை.
எமக்கு பிள்ளை என நாம் நம்பி இருந்தோம்
நீ கரிகாலன் படையணிக்கு சொந்தமாகினாய்
ஐந்தாண்டு என்ன நாம் மறையும் வரை
உன் நினைவு நீங்காதையா
கண்ணீர்ப் பூக்களை காணிக்கை
ஆக்குகின்றோம்.

அரசன் களஞ்சியம்,
பிரதான வீதி,
ஜெயபுரம்.

அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உற்றார்,
உறவினர்கள்.


(சி.11776)



டில்லி வந்த முஷாரப்பிற்கு அவர் பிறந்த இடத்தின் வரை படத்தை பிரதமர் மன்மோகன்சிங் வழங்கிய காட்சி.



பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நினைவுப் பரிவு வழங்கிய காட்சி.



அதிபர் முஷாரப்பை ராஷ்ரபதி பவனில் குடியரசுத்தலைவர் கலாநிதி அப்துல் கலாம் வரவேற்றபோது எடுத்த காட்சி. அருகில் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்சித் மெஃமூத்கசூரி உள்ளார்.

# விஸ்வஹிந்துப்பரிசத் ஆதரவுடன் பா.ஐ.கட்சியின் தலைவர் பதவியைக் கைப்பற்ற உமாபாரதி திட்டம்!

(போபால்)

**விஸ்வஹிந்துப் பரிசத்தின் ஆதரவுடன் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்ற உமாபாரதி முயற்சி செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கென தனது ஆதரவாளர்களுக்கான கூட்டத்தை எதிர்வரும் 21ஆம் திகதி நடத்தவுள்ளார்.**

மத்திய பிரதேச முதல்வராக இருந்த உமாபாரதி ஒரு வழக்குப் பிரச்சினை காரணமாகத் தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

பொறி பறக்கும் பேச்சாளராக இருந்த இவர் அகில இந்திய பாரதிய ஜனதாக் கட்சி பொதுச் செயலாளராக இருந்த போது பா.ஜ.க செயற் குழுக் கூட்டத்தில் வெங்கையாநாயுடு பிரமோத் மகாஜன் போன்ற இரண்டாம் நிலைத் தலைவர்கள் மீது கடுமையாகக் குற்றம் சாட்டியிருந்தார். அத்துடன் வாஜ்பாய், அத்வானி ஆகியோரின் முன்னிலையிலே கட்சி கூட்டத்தில் இருந்து வெளிநடப்பும் செய்திருந் தார். இதனால் அவரை பா.ஜ.க.வின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் இடை நிறுத்தியிருந்தனர். பின்னர் அவர் வாஜ்பாய் அத்வானியைச் சந்தித்ததைத் தொடர்ந்து கட்சியிலே மீண்டும் சேர்க்கப்பட்டார். வாஜ்பாய், அத்வானி ஆகியோர் பதவி விலகி இளம் தலைமுறையினரிடம் கட்சியை வழி நடத்தும் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டுமென ஆர்.எஸ்.எஸ் இயக்கத் தலைவர்களும் விஸ்வ ஹிந்துப் பரிசத்தலைவர்களும் யோசனை கூறியதைத்தொடர்ந்து பா.ஜ.க. தலைவர் பதவியைப்பிடிக்க உமாபதி முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காஞ்சிபுரம்,கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல் குறித்து தி.மு.க ஆலோசனைக் கூட்டம்

(சென்னை)

தமிழகத்தின் காஞ்புரம்,கும்மிடிப் பூண்டி இடைத்தேர்தல் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்று தி.மு.க.வின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தலைமைதாங்கவுள்ளார். வருகின்ற மே மாதம் 14 ஆம் திகதி மேற்கூறிய இரண்டு தொகுதிகளுக்குமான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனுத்தாக்கல்கள் நேற்று நடைபெற்றன. தி.மு.க.கூட்டணி சார்பில் எந்தக்கட்சி போட்டியிடுவது என்று இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்படும்.

# பாக்.அதிபரிடமிருந்து அத்வானிக்கு அபூர்வ பரிசு?

பாகிஸ்தான் அதிபர் முஷராப் பாரதிய ஜனதாக்கட்சித்தலைவர் அத்வானிக்கு அபூர்வ பரிசு ஒன்றை வழங்கியுள்ளார். முஷாரப்பும், அத்வானியும் ஒரே பள்ளியிலே படித்த மாணவர்களாகவும் நண்பர்களாகவும் இருந்தனர். இக்காலப் பகுதியிலே எடுத்த புகைப்படங்கள் கொண்ட ஒரு அல்பத்தையே பரிசாக அத்வானிக்கு முஷாரப் வழங்கியுள்ளார். இதனைப் பெற்றுக்கொண்ட அத்வானி தான் மிகவும் பெறுமதி மிக்க அபூர்வ பரிசொன்றை பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

# அ.தி.மு.க.வுடன் ரி.இராஜேந்தர் கூட்டணி சேருவதற்குயோசனை

எதிர்வரும் சட்டமன்றத்தேர்தலில் தி.மு.கழகத்தை எதிர்ப்பேன் ஆனால் கலைஞர் கருணாநிதியை எதிர்க்கமாட்டேன் என நடிகரும் இலட்சிய தி.மு.க.கட்சித்தலைவருமான ரி.இராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மதுரையில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசியபோதே மேற்படி தகவலை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; தமிழக சட்டமன்ற இடைத்தேர்தலில் எமது கட்சி போட்டியிடாது. ஆனால் பொதுத் தேர்தலில் போட்டியிடுவோம். எமது கட்சிக்கென ஒரு கொள்கையுள்ளது. அதன்படி எம்மிடம் ஆதரவு கேட்கும் கட்சியுடன் கூட்டணி சேரத் தயாராகவுள்ளோம். தி.மு.க.வை வீழ்த்துவது தான் எமது குறிக்கோள் அதற்குச் சரியான பெரிய கட்சி அ.தி.மு.க.தான் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அத்வானி,சோனியாவிற்கு முஷாரப் அழைப்பு: இருவரும் பாக்.செல்வதென முடிவு

(புதுடில்லி)

டில்லி வந்த முஷாரப்பை பா.ஜ.க தலைவர் எல்.கே அத்வானியும், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியும் சந்தித்துப் பேசியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அத்வானியையும், சோனியாவையும் பாகிஸ்தான் வருமாறு முஷாரப் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு பாகிஸ்தான் இருவரும் செல்வதற்கு இணங்கி யுள்ளனர்.

புதுடில்லிக்கு வருகை தந்திருந்த பாகிஸ்தான் அதிபர் முஷாரப் டில்லியின் தாஜ் மான் சிங்கில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த போதே அத்வானி முஷாரப்புடன் பேசிக் கொண்டிருந் தார். அதனைத் தொடர்ந்து அங்கு வந்த சோனியாவும், முஷாரப்புட னான சந்திப்பில் கலந்து கொண்ட னர்.

இரு நாட்டு உறவுகளை வளர்ப் பது பற்றியும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. சோனியாவும் முஷாரப்பும் சுமார் 45 நிமிடம் வரை பேச்சுக்களில் ஈடுபட்டனர். இதன் போது சோனியா வையும், அத்வானியையும் பாகிஸ் தான் வருமாறு விடுத்த அழைப்பை இருவரும் ஏற்றுக் கொண்டு பாகிஸ்தான் செல்லவுள்ளனர். இதற் கான திகதி வெளியுறவுத்துறை அதிகாரிகள் மத்தியில் முடிவெடுத் துப் பின்னர் அறிவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காஷ்மீர் பிரச்சினைக்கு இராணுவப் பலம் மூலம் தீர்வுகாண முடியாது - முஷாரப்

காஷ்மீர் பிரச்சினைக்கு இராணுவப் பலம் மூலம் தீர்வுகாண முடியாது என பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை செய்தியாளர்கள் மத்தியில் பேசிய முஷாரப் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா,பாகிஸ்தான்,காஷ்மீர் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிபந்தனைக்காலம் விதிக்கப்படாமல் பேச்சுக்கள் நடத்தப்பட்டுத்தீர்வு காணவேண்டும். காஷ்மீர் பிரச்சினை குறித்து எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாக சாதிக்க முடிந்துள்ளது எனக் கூறிய அவர் இரு நாடுகளும் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய அணுகு முறையைக் கடைப்பிடிக்கவேண்டுமெனவும் சுதந்திரம், சுயாட்சி, தன்னாட்சி, கூட்டுநிர்வாகம் உள்ளிட்ட விடயங்களில் ஆழமாக விவாதித்து படிப்படியாகத் தீர்வு காணப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# முப்பதாயிரம் கோடி ரூபா முத்திரைத்தாள் மோசடியில் கைதான தெல்கி வாக்கு மூலம் வழங்கத் தயார்!

**–அரசியல்வாதிகள்,பொலிஸ் அதிகாரிகளிடையே பதற்றம்**

(புனே)

முப்பதாயிரம் கோடி ரூபா போலி முத்திரைத்தாள் அச்சிட்டு விற்பனை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் அப்துல் கரீம் தெல்கி தனது குற்றத்தை ஒத்துக்கொள்ளும் வாக்குமூலம் அளிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். இதனால் பல அரசியல் வாதிகளும் பொலிஸ் அதிகாரிகளும் கலக்கமடைந்துள்ளனர். மராட்டிய மாநிலத்தின் புனே அருகில் இருக்கும் எர்வாடா மத்திய சிறையில் இருக்கும் தெல்கியைச் சந்தித்த வழக்கறிஞரான ஹர்சத் நிம்பால்கர் தெரிவிக்கையில்; கடந்த ஏழு ஆண்டுகளாக தெல்கியுடன் தொடர்பு வைத்திருந்த அரசியல் வாதிகள் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலரது பெயர்களை குறித்து வைத்திருப்ப தாகவும் தன்னால் உதவி பெற்ற வர்களையும், தன்னிடம் உதவிகேட்டு வந்தவர்களின் விபரங்களையும் கொண்ட 60 தொடக்கம் 70 பக்க வாக்குமூலம் தயாரித்து வைத்திருப்ப தாகவும், தனது எயிட்ஸ் நோய் தணிந்து சரியான மனநிலையை அடைய உரிய வசதிகளை செய்து கொடுத்தால் தகவல் கொடுக்கத் தயாராகவுள்ளதாகவும் கூறியதாகத் தெரிவித்தார்.




தஞ்சை மண்டல மாநாட்டில் தி.மு.க.வின் துணைப்பொதுச்செயலர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார். மேடையில் தி.மு.க.தலைவர் கருணாநிதி, பொதுச்செயலாளர் அன்பழகன், பொருளாளர் ஆற்காடு வீராசாமி ஆகியோர் உட்பட அரசியல் தலைவர்கள் அமர்ந்துள்ளனர்.

# 15000 பட்டதாரிகளுக்கு வேலை இல்லை

தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளின் பெருக்கத்தால் ஆண்டொன்றுக்கு சுமார் 15 ஆயிரம் பி.ஈ.பட்டதாரிகள் வேலையின்றி உள்ளதாக ஆய்வொன்று தெரிவிக் கிறது.

தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு 52 ஆயிரம் மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் படித்து வெளியேறு கின்றனர். இவர்களிலே 15 ஆயிரம் மாணவர்கள் வேலை வாய்ப்பு எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவதியுறுவ தாக அவ் ஆய்வு தெரிவிக்கிறது.



உப்பு சத்தியாக்கிரகப் போராட்ட பவளவிழாவை முன்னிட்டு திருச்சியில் இருந்து வேதாரணியத்திற்கு காங்கிரஸ் கட்சியினர் பாதயாத்திரை புறப்பட்ட காட்சி.



இந்தியா-பாகிஸ்தான் இடையே டில்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நடந்த கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்கள் லாகூர் நகரில் உற்சாகத்துடன் ஊர்வலம் வந்த காட்சி.

## இந்தியாவுக்கு எதிரான வெற்றி பாகிஸ்தானில் கொண்டாட்டம்

கிரிக்கெட் வெற்றியை ஒட்டுமொத்த பாகிஸ்தானும் கொண்டாடுகிறது. "1992இல், உலகக்கோப்பையுடன் இம்ரான்கான் அணி திரும்பியபோது அளித்த வரவேற்பை விட இம்முறை இன்சமாம் தலைமையிலான அணிக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்படும்." என்கிறார்கள் அந்நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள். பாகிஸ்தான் மக்கள் ஒவ்வொருவருக்கும் வீரர்கள் மகிழ்ச்சி, ஆனந்தமளித்துவிட்டனர். அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக, இரண்டாவது சிறந்த அணி இப்போது நாங்கள்தான் என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்கின்றனர்.

## கங்குலியின் முறையீடு ஐ.சி.சியால் நிராகரிப்பு



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்குலிக்கு ஆறு போட்டிகள் மீது வீதிக்கப்பட்ட தடையை எதிர்த்து செய்த மேல் முறையீட்டை ஆராய்ந்த சர்வதேச கிரிக்கெட் சபை அதனை நிராகரித்துள்ளது.

கங்குலியின் பந்து வீச்சாளர்கள் பந்து வீசுவதில் தாமதம் காட்டியதற்காக கங்குலி மீது ஆறு போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டு, பின்னர் பாகிஸ்தானுடனான கடைசி இருபோட்டிகளில் அவர் பங்கேற்க சர்வதேச கிரிக்கெட்சபை அனுமதியளித்தது. எனினும் இந்திய கிரிக்கெட் சபை அதனை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மோசமான ஆட்டத் தால் கோபம் கொண்ட ரசிகர்கள் இந்திய வீரர்களின் உருவப்படங்களை தீ மூட்டி எரிக்கும் காட்சி.



## இறுதி ஒரு நாள் போட்டி முடிவைப்பார்க்க விரும்பிய முஷாரப் அதனைக் கைவிட்டார்



டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த கிரிக்கெட் போட்டியை பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் பார்த்தனர். போட்டி தொடங்கியதில் இருந்து ஒரு மணி நேரம் இருவரும் ஆட்டத்தை ரசித்தனர்.

கிரிக்கெட் ஆர்வலரான முஷாரப் அப்போது போட்டி பற்றிய சில விளக்கங்களை மன்மோகன்சிங்குக்கு எடுத்துக் கூறினார். பின்னர் இருவரும் பேச்சுவார்த்தை நடத்த மைதானத்திலிருந்து சென்றுவிட்டனர்.

போட்டியின் கடைசி 30 நிமிடங்கள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும் என்று கருதி ஆட்டத்தை மீண்டும் பார்க்க முஷாரப் விரும்பினார். இதை மன்மோகன்சிங்கிடம் தெரிவித்தார். அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனால் போட்டி எந்தவித பரபரப்பும் இல்லாமல் ஒரு அணிக்குச் சாதகமாகச் சென்றது தெரியவந்தது.இதைத் தொடர்ந்து முஷாரப் போட்டியை மீண்டும் பார்க்க நினைத்த தனது முடிவைக் கைவிட்டார்.

இது தொடர்பாக முஷாரப் கூறும் போது, ஆட்டம் விறுவிறுப்பாக இருந்திருந்தால் டில்லிபெரோசா கோட்லா மைதானத்திற்கு மீண்டும் சென்றிருப்பேன் என்றார்.



ஹெரடியாவில் நடைபெற்ற 17ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்ட தகுதிப் போட்டியில் மோதும் கோல் டரிகா அணியின் லுயிஸ் சோர்டரோவும் ஐக்கிய ராச்சியத்தின் ரையன் சொரகாவும்.

## எதிர்வரும் ஆஷஸ்போட்டித் தொடர்; இங்கிலாந்து அணிக்கு வெற்றிவாய்ப்பு இல்லை

**இயன் ஹீலி**

எதிர்வரும் யூன் மாதம் ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய அணியுடனான ஆஷஸ்கிண்ணடெஸ்ட் போட்டியில், ஒரு போட்டியில் தானும் இங்கிலாந்து வெற்றிபெறாது என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் இயன்ஹீலி தெரிவித்துள்ளார்.

அண்மையில் பலம் மிக்க நியூசிலாந்து அணியுடனான போட்டியில் டெஸ்ட் தொடரை இரண்டுக்கு பூச்சியமாகவும், ஒருநாள் தொடரை ஐந்துக்கு பூச்சியமாகவும் அவுஸ்திரேலியா அணி துடைத்து விட்டதை அவர் நினைவுபடுத்தியுள்ளார்

இங்கிலாந்து அணியும் தற்போது தனது திறனை வெளிக்காட்டிவருகின்றபோது அவர்களால் அவுஸ்திரேலிய அணியை வெல்ல முடியாது 1986 -87 காலப்பகுதியில் அதன் திறமை வெளிப்பட்டு ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியதுடன், ஒருவருட காலமாக அது சிறந்து விளங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் மத்தியூகெய்டன் பற்றி அவர் பெரிதும் விமர்சித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி ஐந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றும், அதற்கு முன்னதாக ஜூன் 11ஆம் திகதி லீசெஸ்டசயர் அணியுடன் ஒருநாள் போட்டியில் பங்கேற்கும்.

## உலக மெய்வல்லுநர் போட்டியை குறிவைத்து பிரான்ஸ் வீராங்கனை





பிரிட்டனின் மரதன் ஓட்ட வீராங்கனையான பவுலா ரட்கிலிப் தான் லண்டன் மரதனில் பெற்ற வெற்றியை உலக மெய்வல்லுநர் போட்டியில் எவ்வாறு தக்கவைத்துக் கொள்ளலாம் எனக் காத்திருக்கின்றார்.

உலக சாதனைப் பட்டியலில் மூன்றாம் இடத்திலிருக்கும் அவர் உலக மெய்வல்லுநர் போட்டிகளையடுத்து கெல்சிங்கியில் நடைபெறும் பத்தாயிரம் மீற்றர் மரதன் போட்டியிலும் பங்கேற்கவுள்ளதுடன் இரு போட்டிகளிலும் வெற்றிபெற வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மரதன் ஓட்டப் போட்டிகளின் பணிப்பாளரான நியூயோர்க்கைச் சேர்ந்த மேரிவிட்டன் பேர்க் ரட்கிலிப் சிறந்த வீராங்கனை என்றும் அவரை வெல்ல யாராலும் முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

## 19 வயது கால்பந்து அணி; விரும்புவோர் சமுகமளிக்கவும்

19 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட மாவட்ட அணிக்குரிய தெரிவு மற்றும் தொடர் பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் இளையோர்கள் நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்திற்கு வருகை தருமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா கேட்டுக் கொள்கிறார்.

## பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் கால்பந்தாட்டப் போட்டி இறுதி முடிவு

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குகிடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த 11ஆம் திகதி அன்று இத்தாவில் நவணிவெளி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கால்பந்தாட்டப்போட்டியில் ஆறு பதிவு செய்யப்பட்ட கழகங்கள் கலந்து கொண்டன. இறுதிப் போட்டியில் சோலை சென்பீற்றர்ஸ் அணிகள் மோதின.

இறுதியில் தண்ட உதைமூலம் சென்பீற்றர்ஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

நடுவர்களாக இ.சிவலிங்கம் க. பிரபாகரன் இ.அருள்குமார் க.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர்.

இறுதி நிகழ்வில் வடபோர்முனை களமுனைத் தளபதி ஜெரி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## ஹவுண்டி போட்டி ஒன்றில் பீற்றர்சன் திறமை மழுங்கடிப்பு




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பிரபல துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனின்திறன்ஹவுண்டி போட்டியொன்றில் மழுங்கடிக்கப்பட்டுள்ளது ஹம்சயர் அணிக்காக எசக்ஸ் அணிக்கெதிரான போட்டியின்போதே அவருக்கு இந்த மோசமான நிலையேற்பட்டது. அவர் லீக் போட்டியொன்றில் ஐந்து ஓட்டங்களைப் பெற்றதும் எசக்ஸ் அணியுடன் ஒரு ஓட்டமும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் அவர் தேசிய அணியில் இடம்பிடிப்பதில் சந்தேகமேற்பட்டுள்ளது.

செக்ஸ் அணியில் சுழற்பந்து வீச்சாளர் கிராண்ட் பிளவர் இப்போட்டியில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். டரன்கோ ஒன்பது ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை மட்டுமே கொடுத்தார் ஹம்சயர் அணி 175 ஓட்டங்களுக்குள் சுருண்டது.


இதற்கிடையில் மழை குறுக்கிட்டதால் டக்வேர்த் லூயிஸ் முறையில் வெற்றி எசக்ஸ் அணி வசமானது.

விளையாட்டு





போர்த்துக்கல்லின்,லிஸ்பன் நகரில் மோட்டோ, ஜி.பி., கிராண்ட் பிரீக்ஸ் பந்தயம் நேற்று முன்தினம் நடந்தது. பிரேசில் வீரர் அலெக்ஸ் பாரோஸ் மின்னல் வேகத்தில் ஓட்டி முதல் இடம்பெற்றார். (அடுத்த படம்) வெற்றிக்கோப்பையை முத்தமிட்டு மகிழ்கிறார்.



## சிந்தனைக்கு

*அன்னை பூபதி தனிமனிதப்பிறவியாகச் சாகவில்லை; தமிழீழத்தாய்க்குலத்தின் எழுச்சிவடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.*

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-04-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அன்னையின் தியாகம்!

தமிழ் மக்களின் உரிமைக்காய்-பாதுகாப்பான வாழ்விற்காய் குரல் கொடுத்து இந்திய இராணுவத்தின் நீதியற்ற செயல்களுக்கு எதிராகச் சாகும் வரை உண்ணாநோன்பிருந்து சாவைத் தழுவிக்கொண்ட அன்னை பூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

அன்னை பூபதியின் அர்ப்பணிப்பு ஒப்பற்றது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையாளருக்கு எதிராக தாய்க்குலம் சளைக்காது போரிடத் தயாராகவுள்ளது என்பதைத் தனது அர்ப்பணிப்பின் மூலம் அன்னை பூபதி உலகிற்கு தெளிவாகவே வெளிக்காட்டியிருந்தார்.

தியாகி திலீபனின் அர்ப்பணிப்பிற்கு இந்தியா உரிய கௌரவம் அளிக்காத போதிலும் அன்னை பூபதியும் அதேவழியில் இந்தியாவிற்கு தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால் இந்திய அரசு இதனையும் புரிந்து கொண்டதாக இல்லை. மாறாக இச்சாத்வீகப் போராட்டத்தினைக் குழப்பத்திற்கு உள்ளாக்கித் தோற்கடிக்கும் வகையிலேயே நடவடிக்கைகளை மேற கொண்டது.

தியாகி திலீபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த போது இந்திய அரசு அதனைக் கண்டுகொள்ளவில்லை. விடுதலைப்புலிகள் ஏதோ அரசியல் நாடகம் நடத்துகின்றார்கள் என்றே அது கருதியது. அன்றைய இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என் டிக்சிற்றின் வரட்டுத்தனம். விடுதலைப்புலிகளின் தேசத்தின் மீதான பற்றுறுதியைப் புரிந்து கொள்ள இடமளிக்கவில்லை.

இதேபோன்றே அன்னை பூபதியின் உண்ணாநோன்பையும் இந்தியா புரிந்துகொள்ளவில்லை. அதாவது விடுதலைப்புலிகளை எவ்வாறு புரிந்துகொள்ளவில்லையோ அதேபோன்று தமிழ்மக்களையும் அது புரிந்துகொள்ளவில்லை. இதன் விளைவானது தியாகி திலீபன் தியாகி அன்னை பூபதி போன்றவர்கள் உயிர்த்தியாகம் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் இதன் விளைவுகள் இந்தியாவைப் பாதிக்காமல் இல்லை. இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் அவமானகரமாக வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதற்கும், இலங்கை இனப்பிரச்சினையில் நீண்ட காலமாக இந்தியா ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகியமைக்கும் இவையும் பங்களிக்காமல் இல்லை.

ஒரு பெரிய நாடு, பிராந்திய வல்லரசு என்ற நிலையில் செயற்படுகையில் அதன் அபிலாசைகள் பெரிதாக விரிந்ததாக இருக்கலாம். ஆனால் அவற்றை அடைவதற்கு கையாளும் வழிமுறையானது ஒரு மக்கள் கூட்டத்தின் உரிமைகளை ஒடுக்கி விடுவதாகவோ, ஓரம் தள்ளி விடுவதாகவோ இருக்க முடியாது. இது வெற்றிதரக்கூடிய வழி முறையாக மாட்டாது.

இந்தியாவைத் தமிழ் மக்கள் என்றுமே தமது விரோத சக்தியாகப் பார்த்தது கிடையாது. ஆனால் 1987 இல் இந்தியா சிறிலங்காவுடன் ஒப்பந்தம் செய்த போதும், அதனை அமுல் படுத்த முயன்ற போதும் இந்தியா தமிழ் மக்களை தமது நட்பு சக்தியாகப் பார்க்கவில்லை. தனது பிராந்திய நலன் என்ற அடிப்படையில் தமிழ்மக்களின் நலன்களைப் பலியிடவே அது முனைந்தது.

அதன் விளைவானது இந்திய-தமிழ் மக்கள் உறவில் கசப்பான பல சம்பவங்கள் ஏற்படக் காரணமாகியது. இதனால் இந்திய அரசு இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் நேரடியாக தலையீடு செய்வது என்ற விடயத்தில் நீண்ட காலம் ஒதுங்கியிருக்க வேண்டியதாகியது. ஆனால் அண்மையில் வெளியாகும் சில தகவல்கள் இந்திய அரசின் நேரடித் தலையீடு என்பது அரசியல்இராஜதந்திர ரீதியல் வெளிப்படுத்தப்படாது விடினும் இந்தியப் புலனாய்வுத்துறை சில நகர்வுகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது தமிழ் மக்களினால் ஓரம் தள்ளப்பட்ட அரசியல் வாதிகள், தமிழ் இனவிரோத சக்திகளாக சிறிலங்கா ஆயுதப்படைகளின் துணைப்படையாகச் செயற்படும் குழுக்கள் என்பனவற்றை ஓரணியாகத் திரட்டவும், அவர்களின் செயற்பாட்டைத் தீவிரப்படுத்தவும் முற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தகைய தகவல்கள் உறுதிப்படுத்தத்தக்கதாயின் இந்திய அரசு மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத வகையில் தனது செயற்பாட்டைத் தொடர்வதில் ஆர்வம் கொண்டுள்ளதாகவே கருத வேண்டியிருக்கும். அதாவது தியாகி திலீபன், தியாகி அன்னை பூபதி ஆகியோர் அன்று எடுத்துக் கூற முற்பட்டதை இந்தியா இன்னமும் புரிந்துகொள்ளவில்லை அன்றிமதிப்பளிக்கத்தயாராக இல்லை என்பதே அதன் அர்த்தமாகும். அதாவது முன்னர் போலவே தவறான மதீப்பீடுகள் அணுகுமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் மீண்டும் இந்தியா செயற்பட முற்படுவதாகவே கொள்ள வேண்டியிருக்கும்.

# மின்சாரசபையை மீளமைப்பதில் அரசு அசமந்தம்;
# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி ரத்து!

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் மின்சார சபையை மீளமைப்பதில் காட்டிவரும் அசமந்தப் போக்கையடுத்து ஆசிய அபிவிருத்திவங்கி மின்சார சபைக்கான நிதியுதவியை இரத்துச் செய்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே 60 மில்லியன் டொலர்களை இலங்கை மின்சார சபைக்கு வழங்க உறுதியளித்திருந்தது.

மின்சார சபையின் நட்டங்களை ஈடுசெய்து இலாபம் உழைக்கும் நிறுவனமாக அதனை மீளமைக்க வேண்டும். இந்த நிலையிலேயே அது தொடர்பில் நிதியுதவியை வழங்க முடியுமென அந்த வங்கி தெரிவித்திருந்தது.

எனினும் இது செயற்படுத்தப்படாமையே ஆசிய அபிவிருத்தி வங்கி மின்சார சபைக்கான நிதியுதவியை ரத்துச்செய்யக் காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# மின்சாரசபை தனியார்மயமாக்கலை
# பொ.ஐ.மு.அரசே ஆரம்பித்தது

### -ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கையைப் பொது சனஐக்கியமுன்னணி அரசாங்கமே ஆரம்பித்தது என ஐக்கியதேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையிலேயே இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சராக அனுருத்தரத்வத்த இருந்தபோது மின்சாரசபையில் ஊழல்கள் இடம் பெற்றிருந்தன. மக்கள் விடுதலைமுன்னணியின் தொழிற்சங்கங்களின் தொழிற்பாடுகளின் காரணமாக அரசாங்கத்திற்கு தனியார் மயப்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாமல் இருந்தது. மக்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதே அரசின் கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசிய பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவிடம்
# சிறிலங்கா பொலிசாருக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

மகரகமப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் தாக்குதலுக் குள்ளாகி இறந்துள்ளதாக ஆசிய பிராந்திய மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட முச்சக்கர வண்டிச்சாரதி ஒருவர் மகரகம பொலிசாரின் தாக்குதலுக் குள்ளாகி இறந்ததாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தாம் கூடிய கவனத்தைச் செலுத்துவதாக ஆசிய மனித உரிமைகள் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறந்த முச்சக்கர வண்டிச் சாரதியின் மனைவி தனது கணவர் பொலிசாரின் தாக்குதலுக் குள்ளாகியே மரணமானதாகத் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.(32)

# நெல்லை விற்பனை செய்ய முடியாததால்
# மூன்று விவசாயிகள் நஞ்சருந்தித் தற்கொலை

பொலநறுவை மற்றும் தம்புள்ளை பிரதேசங்களில் தாம் உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாது மூன்று விவசாயிகள் நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளனர். மேலும் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் உறுதியளித்தப்படி தங்களுடைய நெல்லுற்பத்தியை நியாயமான விலையில் விற்க முடியாமல் போனமையால் கடன்பழு அதிகரித்து இவர்கள் நஞ்சருந்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் விவசாய அமைச்சும், விவசாய விற்பனை அமைச்சும் ஒன்றிணைந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியதாக அரசு அண்மையில் அறிவித்திருந்த நிலையிலேயே இந்தத் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இது குறித்துக் கருத்து வெளியிட்ட ஜக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்வதாக விளம்பரங்களில் மட்டுமே தெரிவித்து வருகின்றது. உண்மையில் அவ்வாறு நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை. அத்துடன் நெல்லுக்கு நிலையான விலையையும் நிர்ணயிக்க அரசு தவறிவிட்டது எனக் குறிப்பிட்டர்.

விவசாயத்துறை அமைச்சராக ஜே.வி.பி யின் அனுரகுமார திசநாயக்கவும், விவசாய விற்பனை துறை அமைச்சராக டக்ளஸ் தேவாணந்தாவும் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (32).

# தோட்டச் சுவீகரிப்பைத் தடுக்கக்கோரி
# பதுளை மாவட்ட நீதிமன்றில் வழக்கு

மலையகத்தில் தோட்டச் சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்துமாறு கோரி பதுளை மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதுளை இவ்குரகமுவைத் தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்விடத்தையும் தமது மண்ணையும் பாதுகாப்பதற்கான நியாயம் கோரி தாக்கல் செய்த மனு நேற்று பதுளை மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பெருந் தோட்டத்துறை வரலாற்றில் தோட்டச் சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்துமுகமாக தொழிலாளர்கள் தொழிற் சங்க பேதங்களை மறந்து வர்க்க ரீதியில் ஒன்றுபட்டு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருப்பது இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை இவ்குரகமுவை தோட்டத்தின் பங்குதாரர்களில் 21 பேர் ஒன்றிணைந்து தாக்கல் செய்துள்ளனர். வழக்கின் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் தோட்டத்தை நிர்வகிக்கும் முகாமைத்துவப் பணிப்பாளர், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினர், மாவட்டத்தின் அரச அதிபா, உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கும் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்வதற்கும், செலவுகளை ஏற்றுக் கொள்வதற்கும், மலையக மக்கள் முன்னணியும் அக்கட்சியின் தொழிலாளர் முன்னணியும் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### -மத்தியகிழக்கில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி-

# பணமோசடியில் ஈடுபட்ட
# மூவர் பொலிசாரினால் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த மூன்று பேரை கல்முனைப் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த அப்துல் மஜீத் மொகமது இம்தியாஸ் கலாவெவவைச் சேர்ந்த ஜபாஹீர் இர்பான் ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த சமின்தவடகே ரோகன ஆகியோரே இவ்வாறு கைது செய்யப பட்டவர்களாவர். கடந்த மாதம் கல்முனைப் பிரதேசத்திற்கு வருகை தந்த இவர்கள் இந்த வேலை வாய்ப்பு தொடர்பாக பிரச்சாரம் செய்து நகர சபை மண்டபத்தில் கூட்டம் நடத்தி விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து பெற்றுச் சென்றுள்ளார்கள். மூவாயிரத்து நூறு ரூபாவுடன் வைத்திய பரிசோதனைக்குச் செல்ல தயாராகவிருக்குமாறு குறிப்பிட்ட நபர்களுக்கு அறிவித்து விட்டு கல்முனைக்கு சென்றிருந்த சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந் நபர்கள் போலி முகவர்கள் என இவர்களது நடவடிக்கைகள் மூலம் தெரியவந்ததையடுத்தே இவர்களைக் கைதுசெய்துள்ளதாக கல்முனைப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இவர்கள் தொடர்பாக முப்பதிற்கும் மேற்பட்ட புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 78 பேரிடமிருந்து பெறப்பட்டகடவுச்சீட்டுக்களும் ஒரு லட்சத்தி _79 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்று கல்முனை நீதிமன்றத்தில் நீதிபதி எம்.பி.மொஹிதீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட இம் மூவரும் எதிர் வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

- புதுக்குடியிருப்பில் அன்னைபூபதி நினைவாக -

# பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகின

(புதுக்குடியிருப்பு)

தியாகி அன்னை பூபதி நினைவாக புதுக்குடியிருப்பு வலய ரீதியாக நடாத்தப்பட்டபோட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. புதுக்குடியிருப்பில் வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கவிதை, கட்டுரை, சிறுகதை, போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்கள் அனை வரையும் புதுக்குடியிப்பு மாவீரர் மண்டபத்தில் இன்று காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறவுள்ள பூபதியின் நினைவு இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுமாறு முல்லை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டியுள்ளனர்.

கட்டுரை- முதலாமிடம் அ. நிவேதினி, மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம், இரண்டாமிடம்-கே. பானுப்பிரியா புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மூன்றாமிடம்- க. விமலாசினி மு/விசுவமடு மகாவித்தியாலயம்.

சிறுகதை- முதலாமிடம்-கு.விக்கினேஸ்வரன்,மு/பு/மத்திய கல்லூரி, இரண்டாமிடம்-வி. நிதர்ஷா மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்,சி.சுகந்தனி மு/ விசுவமடு மகாவித்தியாலயம், மூன்றாமிடம் வே. டக்கியா புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,

கவிதை முதலாமிடம் -செ. வசுலா புதுக்குடியிருப்பு கனிஷ்ர உயர்தர வித்தி யாலயம், இரண்டாமிடம்-அ.அனுசா வற்றாப்பளை மகாவித்தியாலயம், மூன் றாமிடம்- பெ. டியான்சிலி-வற்றாப்பளை மகாவித்தியாலயம். (08)

## தமிழீழ...

அனுசரணையாளர்கள் அஞ்சுவதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கருத்துத் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் பொதுக்கட்டமைப்பானது இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு நல்ல விடயம் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா அண்மைய தமிழ்-சிங்களப்புத்தாண்டின் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அக்கட்டுரை, விடுதலைப்புலிகள் முன்வைக்கின்ற ஆழிப் பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதில் சிறிலங்கா அரசின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி மிக வேகமாக இருப்பதாகவும் கூறியுள்ளது. ஆழிப்பேரலை மீளமைப்புக்கான கட்டமைப்பு உள்ளிட்ட இருதரப்பு சர்வதேச நிதிப் பகிர்வுக்கான தீர்வு உடனடியாக ஏற்படக் கூடியதல்ல என்றும் சர்வதேச கொள்கை வகுப்பாளர்கள் கருதுவதாகவும் ரொய்ட்டர் கூறியுள்ளது.

## ஆழிப்....

பயணம் தொடர்பாக சர்வதேச செய்திஸ்தாபனம் ஒன்றுக்கு ஜெனீவாவிலிருந்து இக்குழுவில் இடம்பெற்றிருந்த புலித்தேவன் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். சிறிலங்கா அரசுக்குள் பல்வேறு உள்முரண்பாடுகள் இருக்கின்றன. அரசின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி, பல்வேறு சிக்கல்களைத் தொடர்ந்து எழுப்பிக்கொண்டு வருகிறது. சிறிலங்கா சனாதிபதியோ தற்போது நாட்டில் இல்லை. அவர் இங்கிலாந்தில் ஓய்வெடுத்துக் கொண்டு இருக்கிறார். தமிழீழத்திலிருந்து புறப்பட்டு சில வாரங்கள் கடந்து விட்டதாலும் சிறிலங்கா அரசு நிலைமைகள் குறித்து நெருக்கமான தகவல்கள் எதுவும் இல்லை. சிறிலங்கா அரசானது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் மீது எவ்வித அக்கறையுமின்றி இருக்கிறது.

ஆழிப்பேரலைக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் மீது நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். பொதுகட்டமைப்பை ஏற்படுத்த அரசியல் சாசனத் திருத்த வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று சிறிலங்கா அரசு எண்ணுகிறது. அதற்கான காலக் கெடுவை அவர்கள் கேட்டுள்ளனர். பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை நாம் காத்திருப்போம். தென்னிலங்கையும் சிறிலங்கா அரசும் ஆழிப் பேரலைக்கான பொதுக்கட்டமைப்பை நிராகரித்துவிட்டால் எப்படி அவர்கள் அமைதி ஒப்பந்தத்தையோ எமது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கையையோ ஏற்றுக்கொள்வார்கள் என்றும் புலித்தேவன் கேள்வி எழுப்பினார்.

# அரசபடைகளுடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்களுக்குள் புலிகள் ஊடுருவல்?

## சிறில. புலனாய்வுத்துறையிடம் குழப்பம்

சிறிலங்கா அரசபடைகளுடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழ்க் குழுக்களுக்குள் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினர் ஊடுருவி இருக்கின்றார்களா? என்ற குழப்பத்தில் சிறிலங்கா புலனாய்வுத்துறை இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்தசில ஆண்டுகளாகப் பாரிய சரிவைச் சந்தித்த சிறிலங்கா புலனாய்வத்துறை அதற்கான மீளமைப்பிற்காக தமிழ்க்குழுவையே பெரிதும் நம்பியிருந்ததோடு அதனூடாகப்பல திட்டங்களை செயற்படுத்தியும் வந்தது.

இந்நிலையில் இராணுவத்துடன் இயங்கும் குழுக்கள் உண்மையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரா? புலிகளின் புலனாய்வுப் பிரிவினரா? என்ற சந்தேகம் சிறிலங்காப் புலனாய்வுத்துறைக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.அண்மைய தாக்குதல்கள் சில புலனாய்வுத்துறையினரை இத்தகையசிக்கலுக்குள் தள்ளிவிட்டுள்ளது.

ஏனெனில் தாக்குதல்கள் உள்ளிருந்து மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் மேற்படி நபர்கள், சிறிலங்கா புலனாய்வுத்துறையின் திட்டங்கள், நடவடிக்கைகள், தொடர்புத் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றையும் மற்றும் நேரடியாக சம்பந்தப்பட்ட சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் தொடர்பான விடயங்களையும் தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர் என்பதே இதற்கான காரணமாகும் என அவ் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பலாலி விமானத் தளபுனரமைப்பு ஒப்பந்தம்; இந்தியா விரைவில் கைச்சாத்திடவுள்ளது

பலாலி வானூர்தித் தள புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் விரைவில் இந்தியாவுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே பலாலி வானூர்தித்தளத்தை புனர்நிர்மாணம் செய்து நவீனமயப்படுத்த இந்தியாவுடன் உடன்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தபோதும் பின்னர் பல காரணங்களால் காலதாமதம் ஏற்படுத்தப்பட்டு வந்தது. எனினும் இந்தியத் தரப்பில் தற்போது இதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இலங்கை அரசும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரியவருகிறது. (32)

## அன்னை பூபதி...

மேற்கொள் எப்படவுள்ளன. வலிகாமம் பிரதே சத்தைச் சேர்ந்த நல்லூர்,யாழ்ப்பாணம், சரசாலை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கிட்டு நினைவுப் பூங்காவிலும் தீவகப் பிரதேசத்தைச் சேர்ந்த வேலணை, ஊர்காவல் துறை, நெடுந்தீவு மக்கள் வேலணை கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மாவடிப் பிள்ளையார் கோவிலிலும், வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி மக்கள் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை அன்னைபூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவையொட்டிய அஞ்சலி நிகழ்வும் அடையாள உண்ணாவிரதமும் நேற்றுக் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

உருத்திரபுரம் பொதுச்சந்தைக்கு அருகாமையில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், வர்த்தகர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர் எனப் பலரும் கலந்துகொண்டதோடு அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலியும் செய்தனர்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்வுகள் எழுச்சியுடன் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மைச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐ.நா மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.பாவரசன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்புப் பிரிவுப் பொறுப்பாளர் நரேஸ் ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதி அவர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலையினை தமிழீழ அரசியல்துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் மணியண்ணா அணிவித்தார். தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது. இதே வேளை கிளிநொச்சியில் கண்டாவளை, வட்டக்கச்சி,பரந்தன், பூநகரி, உருத்திரபுரம், ஜெயபுரம். முழங்காவில், அக்கராயன், வன்னேரிக்குளம், கோணாவில்,திருமுறிகண்டி எனப் பல பகுதிகளிலும் அடையாள உண்ணாநோன்புகள் இடம்பெற்றன. (சோ,ச,41)

## மூதூரில்...

சேதங்களும் ஏற்படவில்லை என்றும் இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

## தமிழ்ச்செல்வன்...

இன்று இலங்கை திரும்பவுள்ள சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை கட்டுநாயக்காவிலேயே தங்க வைத்துப் பேச்சுக்கள் நடத்தப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சமாதான...

நிலையைச் சீர்குலைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக சர்வதேச சமுதாயத்திற்கு எங்களுடைய தலைமையுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக்குவது.

இரண்டாவது இருபது வருடகால யுத்தத்திலே நாங்கள் ஒரு மனிதப் பேரழிவுகளைச் சந்தித்துப் பெரிய மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்திருந்த சூழ்நிலையில் சுனாமி இயற்கைப் பேரழிவு ஏற்பட்டு இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட எங்களுடைய மக்கள் இறந்தும், எங்களுடைய தமிழீழத்தின் முழுக் கரையோரப் பிரதேசங்களும் அழிந்த நிலையில் நாங்கள் சர்வதேச சமூகத்திடம் மனிதாபிமான உதவிகளைக்கோரி நிற்கின்றோம்.

இந்த மனிதாபிமான உதவிகளைச் சர்வதேச சமூகம் செய்ய இணங்கியும், ஆயத்தமாகவும் இருக்கின்ற வேளையில் சிங்கள அரசாங்கம் தடைகளைப் போட்டு இந்த உதவிகளை நெருக்கடி நிலைக்கு உட்படுத்துகின்றதென்பதனையும் தெளிவாக்கும் நோக்குடன்தான் நாங்கள் இந்தப் பயணத்தைத் தொடங்கியிருந்தோம்.

எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களுடைய பணிப்பிற்கிணங்கத்தான இந்தப் பயணம் தொடங்கப்பெற்றது.

இதன்போது நாங்கள் இரண்டு விடயத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கின்றோம். எமது மக்களுடைய நியாயமான அபிலாசைகள் பற்றியும் கடந்த மூன்று வருடகால சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட நெருக்கடிகள் இலங்கை அரசாங்கத்தினுடைய நேர்மையீனங்களைப் பற்றி நாங்கள் எடுத்து விளக்கி இருக்கிறோம்.

நாங்கள் அவர்களுடன் உரையாடுகின்ற பொழுது பல விடயங்களை உத்தியோகப் பற்றற்ற முறையில் அறிந்து கொண்டிருப்பது போல எங்களால் உணர முடிந்தது.

எங்களுடைய தரப்பில் இருந்து உண்மை நிலைப்பாடுகளை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகள் இல்லாமையினால் இலங்கை அரசாங்கம் உண்மைக்குப் புறம்பான, தவறான கருத்துக்களையும், நிலைப்பாடுகளையும் அங்கே எடுத்துச் சொல்லி இருப்பதை எங்களால் உணர முடிந்தது. ஆகவே இந்தப் பயணத்தில் எங்களுடைய தலைமையினுடைய நிலைப்பாடுகளை நேரடியாக இந்த நாடுகளுடைய அரச உயர்மட்டத்திற்கு எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்தவகையில் இந்தப் பயணம் ஓரளவு எங்கள் நோக்கத்திற்கு உகந்ததாகவும், வெற்றிகரமாகவும் இருந்ததாகவே நான் கருதுகின்றேன் எனத்தெரிவித்தார்.

சிறிலங்கா அரசு மேற்கொண்டுவரும் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் சமாதானத்தை வென்றெடுப்பதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை வெளிநாட்டு அரசாங்கங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றனவா? எனக்கேட்டபோது

அவர்களுக்குப் பல சந்தேகங்கள் இருக்கின்றன. அதாவது சமாதான முன்னெடுப்புக்களைத் தொடங்குவதற்கான தாமதங்கள் தடைகள் என்பன பற்றி தமிழீழ விடுதலைகள் மீதுதான் குற்றச்சாட்டு சுமத்துகின்ற ஒரு பரப்புரையை உலகளாவிய ரீதியாக அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருந்தது.

ஆகவே நாங்கள் ஆதார பூர்வமா டந்த நிகழ்வுகளையும், சம்பவங்களையும் அது தொடர்பாக எங்களுடைய நிலைப்பாடுகளையும் தெளிவாக்கியபோது அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாகஇருந்தது. அரசின் பக்கம்தான் பிரச்சினை இருக்கின்றது என்பதை அவர்கள் விளங்கியுள்ளனர்.

அடுத்து சுனாமி உதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு, ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இயலுமானால் இன நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு நாங்கள்தான் முதலில் வேண்டி நிற்கின்றோம். அதற்கான ஆலோசனையைக் கூட நாங்கள் கொடுத்தோம். இலங்கை அரசாங்கம் அறிக்கைகளை விடுவதில்தான் தனது நேரத்தைச் செலவழித்ததே தவிர ஆக்கபூர்வமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் சென்றடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் அவர்கள் எந்த ஆர்வமும் எடுக்கவில்லை இதை நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தினோம்

இது தொடர்பாக நோர்வே தனது ஆலோசனைகளை எங்களுக்குத்தந்தவுடனேயே எங்களுடைய தலைவர் அதனை ஏற்றுக் கொண்டு நாங்கள் எங்களுடைய இணக்கப் பாட்டை அறிவித்திருந்தோம்.

இப்படியான போக்குகள் எப்படித் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். எப்படித் தமிழர்களை நெருக்கடிக்கு உட்படுத்த வேண்டும் என்ற சிந்தனையோடுதான் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது என்பதை நாங்கள் வலியுறுத்தினோம். இதனைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்தினோம்.

அரசாங்கம் ஆயுதக் குழுக்களை இலங்கைப் படையில் வைத்திருப்பதன் மூலம் படுகொலைகளையும், தமிழ்மக்கள் மத்தியில் நெருக்கடிகளையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

அதேபோன்று இப்போது எங்களால் வெளியேற்றப்பட்ட கருணா என்பவருடைய பெயரில் இப்போது ஓர் ஆயுதக்குழுவை உருவாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இது விடுதலைப் புலிகளையும் மக்களையும் சீண்டி அவர்கள் சமாதானத்திற்கு விரோதமானவர்கள் என்பன போன்றதோற்றப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.இதனால் விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்ந்து பொறுமை காத்துக்கொண்டிருக்க முடியாது.

எங்களுடைய மக்களையும் பிரதேசத்தையும் பாதுகாக்கின்ற ஒரு தார்மீகப் பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. அந்த வகையில் எங்களுடைய தேசியத்தலைவர் நிலைப்பாடுகளைத் தெளிவாக்கி இருக்கின்றார்.

நிச்சயமாக மிக விரைவிலேயே இதற்குத் தீர்க்கமான பதில்கள் அளிக்கப்படும் என நான் நினைக்கின்றேன். இந்தவகையில் இந்த நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக இந்தச் சமாதானச் சூழலை சீர்குலைத்து மீண்டும் இலங்கைத்தீவில் நெருக்கடியை ஏற்படுத்தி தமிழ்மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடுக்கின்ற போக்கைத்தான் சிறிலங்காப் படைகளும், இலங்கை அரசாங்கமும் முன்னெடுத்து வருகின்றது போல் எமக்குத் தோன்றுகின்றது என மேலும் அவர் கூறினார்.

தென்னாபிரிக்கப் பயணம் குறித்து நீங்கள் சிறப்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள் எனக் கேட்டபோது

தென்னாபிரிக்கப் பயணம் என்னால் மறக்க முடியாத ஒரு மனப்பதிவாக இருக்கின்றது. அங்கு போன பொழுதுதான் அந்தநாட்டிலேயே தென்னாபிரிக்க மக்கள், தென்னாபிரிக்க அரசு தென்னாபிரிக்க விடுதலைக்காகப் போராடி தென்னாபிரிக்க தேசிய அரங்கில் உறுப்பினர்கள். அவர்களுடைய உணர்வுபூர்வமான தொழிற்பாடுகள் என்பனவற்றை பார்க்கமுடிந்தது. அதிலும் முக்கியமாக அந்த நாட்டில் வாழுகின்ற தமிழ்மக்கள் பல இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். மிக மகிழ்வாகவும், நிறைவாகவும் வாழ்கிறார்கள்.

பல இடங்களில் பெருந்தொயையான மக்களைச் சந்தித்தேன். எதிர்பாராத விதமாகச் சில இடங்களிற்குப் போகின்றபொழுது கலாச்சார நிகழ்வு நடந்துகொண்டிருந்தது. அது தமிழ் மொழி மூல சிறுவர்கள் நாடக நிகழ்வு. பெருமளவு மக்கள் கலந்துகொண்ட அந்த நிகழ்வில் என்னைப்பேசுமாறு அழைத்தனர். மக்களுடைய உணர்வுகளை-தமிழைக்காப்பதற்கும், தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் எடுக்கின்ற மிகக் கடுமையான முயற்சியை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

அதுமட்டுமல்ல எங்களுடைய தலைவர் மீதும், போராட்டத்தின் மீதும் வைத்திருக்கின்ற அளப்பரிய பற்றுதல். அது என்னை மிக உணர்ச்சிவசப்படுத்தியது. நான் பேசிவிட்டு வருகின்றபொழுது எல்லோருமே எங்களுடைய தலைவர் வாழ்க! தேசியத்தலைவர் பிரபாகரன் வாழ்க! தமிழீழம் மலர்க! என்ற கோசங்களை எழுப்பினார்கள். அதைவிடத் தலைவருக்குக் தங்க ளுடைய வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் படியும் கேட்டார்கள். இது என்னைமிகவும் உணர்ச்சிவசப்படுத்தியது என்றார் தமிழ்ச் செல்வன் அவர்கள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது